ஆய்வு நெறிமுறைகள்

டாக்டர் ஈ.ச. விசுவநாதன்

தமிழ்ப் புத்தகாலயம்

ஆய்வு நெறிமுறைகள்

டாக்டர் ஈ. சா. விசுவநாதன்
M A Ph D
வரலாற்றுத் துறை
சொகொடொ பல்கலைக் கழகம்
நைஜீரியா

விற்பனை உரிமை :

தமிழ்ப் புத்தகாலயம்
58, டி.பி.கோயில் தெரு, திருவல்லிக்கேணி
சென்னை-600005

ஆய்வு நெறிமுறைகள்
முதற்பதிப்பு : மார்ச், 1976
இரண்டாம் பதிப்பு : ஜூன், 1981
திருத்திய மூன்றும் பதிப்பு : பிப்ரவரி, 1986

விலை ரூ. 12-00

ĀYVU NEṞI MUṞAIKAḶ
by
Dr. E. SA. VISWANATHAN

Revised Third Edition : February, '86
84 pages
21.5 X 14 cms.
16 kg. white printing
box board binding
Printed by
POONCHOLAI ACHAGAM
Sale rights :
TAMIL PUTHAKALAYAM
58, t. p. koil street
Triplicane : : Madras - 600 005
Price : RUPEES TWELVE

அச்சிட்டோர் :
பூஞ்சோலை அச்சகம்,
சென்னை - 5.

முதற் பதிப்பின் முன்னுரை

'ஆய்வு நெறிமுறைகள்' என்னும் இச்சிறு நூல் மூன்று பகுதிகளை உடையது. முதற் பகுதியில், ஆய்வுரையின் அமைப்பு, ஆய்வு மாணவர் ஆராயப் புகும் பிரச்சனை (the problem to be investigated), பிரச்சனையை அணுகும் முறை, முடிவுரை போன்ற செய்திகளையும், தேர்வாளர் ஆராய்ச்சி மாணவரிடம் எதை எதிர்பார்க்கிறார் என்பது போன்ற செய்திகளையும் சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

இரண்டாவது பகுதியில், ஆய்வுரையினை எழுதும்போது கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதிகளைப் பற்றி விளக்கியுள்ளேன்.

மூன்றாவது பகுதியில், மேனாட்டுப் பல்கலைக் கழகங்கள் ஆய்வுரையினை எழுதும் மாணவர்களுக்குத் தரும் சில நெறிமுறைக் குறிப்புக்களையும், ஆய்வு நெறிமுறையைப் பற்றி மேலும் அறிய விழைவோர்க்குத் துணைபுரியும் வகையில் ஒரு நூற்பட்டியலையும் இணைத்துள்ளேன்.

ஆய்வு நெறிமுறைகளைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கு முதன் முதலில் வாய்ப்பளித்தவர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள். இந்தப் பேச்சு 1975 ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் 2-ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்தது. இப்பேச்சினைக் கேட்ட அன்பர் உயர்திரு எஸ். டி. பாஸ்கரன் இதனை

முறையாக எழுதித் தமிழில் வெளியிட்டால் தமிழக ஆய்வு மாணவர்களுக்குப் பயனுடையதாக இருக்கும் எனக் கருத்துத் தெரிவித்தார்கள்.

ஆய்வு நெறிமுறைகளைப் பற்றித் தெளிவாகச் சிந்திக்கத் தூண்டி, அதனை முறையாக வெளிப்படுத்துவதற்கு வழி வகுத்துத் தந்த பேராசிரியர் சஞ்சீவி அவர்கட்கும், நூலாக உருப்பெற ஊக்கம் தந்த திரு. பாஸ்கரன் அவர்கட்கும் யான் பெரிதும் நன்றியுடையேன்.

என்வேண்டுகோளுக்கு இணங்கி ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம், கலிபோர்னியா பல்கலைக்கழகம், சசெக்ஸ் பல்கலைக் கழகம், ஹார்வர்ட் பல்கலைக் கழகம் போன்றவற்றின் பதிவாளர்கள் தங்கள் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களுக்குத் தரும் 'சில நடைமுறை விதிகளை' எனக்கு அனுப்பி வைத்தனர். அவர்தம் உதவிக்கு யான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

ஆய்வு நெறிமுறைகளை மேலும் அறியப் பயன்படும் சில முக்கிய நூற்பட்டியலை மலாயாப் பல்கலைக் கழக நூல் நிலையத் துணைநூலகர் உயர்திரு பாரதாஸ் கோபால் அவர்கள் தயாரித்து உதவினார்கள். அவருக்கும் என் நன்றி உரியதாகுக.

இந்த நூலினை அனைவரும் வரவேற்பார்கள் என நம்புகின்றேன்.

கோலாலம்பூர்
27—8—1975

ஈ. சா. விசுவநாதன்

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

“ஆய்வு நெறி முறைகள்” என்னும் நூலின் முதற் பதிப்பைக் க்ரியா வெளியீடு, 1976 ஆம் ஆண்டில் வெளியிட்டது. தற்போது இந்த நூல் அச்சில் இல்லாத காரணத்தினுல் க்ரியா வெளியீடு உரிமையாளர் உயர் திரு. எஸ். இராமகிருஷ்ணனை மறுப்படியும் இதனைப் பதிப்பிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவர் காலந் தாழ்த்திய காரணத்தினாலும், பல ஆய்வு மாணாக்கரின் வேண்டுகோளுக்கு இணங்கியும் இந்நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிடத் தமிழ்ப் புத்தகாலய அதிபர் உயர்திரு. கண. முத்தையா அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவருடைய முயற்சியின் காரணத்தினுலேயே, “ஆய்வு நெறி முறைகள்” தற்போது இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இந்த நூலில் ஒரு சில திருத்தங்களையே செய்துள்ளேன். இத்திருத்திய பதிப்பினை ஆராய்ச்சி மாணவர் உலகு வரவேற்கும் என நம்புகின்றேன்.

நைஜீரியா
1-1-1981

ஈ. ச. விசுவநாதன்

ஆசிரியர் பற்றிய குறிப்பு

டாக்டர் ஈ.ச. விசுவநாதன் அவர்கள் 1933 ஆம் ஆண்டு சென்னையில் உள்ள மயிலாப்பூரில் பிறந்தார். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள் மு. வரதராசனார், அ. மு. பரமசிவானந்தம், அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோரிடம் தமிழ் மொழி வரலாறு, தமிழிலக்கியம், இலக்கியத் திறனாய்வு போன்ற வைகளையும்; மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரிடம் சிலப்பதிகாரத்தையும்; சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர்கள் மு. ஆரோக்யசாமி, சி. கி. இராமச்சந்திரன் ஆகியோரிடம் தென்னிந்திய வரலாறு, கல்வெட்டு ஆகியவைகளையும் பயின்று 1957 ஆம் ஆண்டு பி.ஏ. (ஆனர்ஸ்) முதல் வகுப்பில் தேறினார்.

1958 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றார். பேராசிரியர் தனிநாயகம் அவர்களின் மேற்பார்வை யில் திரு.வி.கவைப் பற்றி ஆராய்ச்சி நடத்தி மலாயாப் பல்கலைக் கழக இந்தியத் துறையில், 1965 ஆம் ஆண்டு எம். ஏ. பட்டம் பெற்றார். 'பெரியார் ஈ.வெ.ரா. வின் அரசியல் வாழ்க்கையும், தமிழக அரசியலும்' என்னும் தலைப்பில் உலகப் புகழ் பெற்ற வரலாற்றுப் பேராசிரியர் ஏ. எல். பாஷம் (A. L. Basham) அவர்கள் மேற்பார்வையில் கான்பராவில் உள்ள ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடத்தி 1973 ஆம் ஆண்டு வரலாற்றுத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றார்.

டாக்டர் விசுவநாதன் இங்கிலாந்து, ஐரோப்பா, தென் கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா, கானா, நைஜீரியா போன்ற நாடுகளில் உள்ள பல்லைகக் கழகங்களையும், ஆராய்ச்சி நிலையங் களையும், நூலகங்களையும் நேரில் கண்டறிந்த அனுபவம் உடையவர். இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் தங்கிப் பயிற்சி பெற்ற காரணத்தினால் அங்குக் கையாளப்படும் ஆய்வு நெறிமுறைகளை நன்கு அறிந்தவர். அந்த நெறிமுறைகளை

நம் நாட்டு ஆராய்ச்சி மாணவரும், நம்நாட்டுச் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தம் ஆய்வுரைகளில் கையாண்டுத் தரமான ஆய்வுக் கட்டுரைகளைப் படைக்க வேண்டும் என்னும் பெருவிருப்பம் உடையவர். தமிழக, கேரளப் பல்கலைக் கழகங்களில் டாக்டர் பட்டத்திற்காக எழுதப்படும் ஆய்வுரைகளின் தேர்வாளராக இருந்து வருபவர்.

டாக்டர் ஞா. ச. விசுவநாதன் 1959 லிருந்து 1976 ஆம் ஆண்டு வரை மலாயாப் பல்கலைக் கழகத்தில் உள்ள இந்தியத் துறையில் பணியாற்றி வந்தார். 1976 லிருந்து 1979ஆம் ஆண்டுவரை கானுவில் உள்ள கேப் கோஸ்டுப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பணியாற்றினுர். 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நைஜீரியாவில் உள்ள சொகொடொ, பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் அலுவல் பார்த்து வருகிருர். இந்தப் பல்கலைக் கழகத்தில் உலக வரலாறு, தென்கிழக்குஆசியா, தெற்கு ஆசியா, தூரக் கிழக்கு நாடுகளின் வரலாறுகளைக் கற்பிக்கிருர்.

பாகம் I

ஆராய்ச்சியின் முப்பிரிவுகள்; ஆராய்ச்சியின் ஐம்பெரும் நிலைகள்

i ஆய்விற்குரிய பொருளைத் தேர்ந்தெடுத்தல் ii எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்பக் குறிப்புக்களைச் சேகரித்தல் iii குறிப்புகளைத் திறனாய்தல் iv குறிப்புகளை வகைப்படுத்தல் v ஆய்வுரை எழுதுதல்.

எது ஆய்வுரை அன்று? ஆய்வுரையின் உருவ அமைப்பு; ஆய்வுரையில் தேர்வாளர் எதிர்பார்ப்பன; இறுதியாகப் பெறும் ஆய்வுரை முடிவுகள்; சில பொதுப்படையான விதிகள்

i இயல்கள் ii அடிக்குறிப்புகள் iii ஆய்வுரையில் தன்மை ஒருமையினைப் பயன்படுத்தும் முறை.

ஆய்வுரையின் பொது அமைப்பு; ஆய்வுரையினை எழுதும் போது தவிர்க்க வேண்டிய கருத்துக்கள்; எடுத்துக்காட்டுகள்

பாகம் II

அடிப்படை ஆதாரங்கள் பற்றிய குறிப்பு; அடிக்குறிப்புகளும் நூலட்டவணையும்; ஆதாரங்களை எடுத்துக்காட்டல்

நூல்கள்; முதல் முதலில் கையாளும்போது பின்பற்ற வேண்டிய பொது விதி; மறுமுறை அதே நூலைக் கையாளும்போது பல பாகங்கள் உள்ள நூல்கள்; பல பதிப்புகளுடைய நூல்கள்; இரண்டு மூன்று ஆசிரியர்கள் சேர்ந்து எழுதிய நூல்கள்; பதிப்பு நூலில் உள்ள கட்டுரைகள்; ஆதார நூல்களிலுள்ள கட்டுரைகள்; ஆசிரியர் பெயர் குறிப்பிடாத கட்டுரைகள்; ஆங்கில அமெரிக்கக் குறியீடு அமைப்பு முறைகள்; ஆண்டு, மாத, வார வெளியீடுகள்; செய்தித் தாள்கள், வார இதழ்கள்; ஆங்கில, அமெரிக்க முறைகள்; கையெழுத்துப் பிரதிகள், கடிதங்கள்.

அடிக்குறிப்பு அமைய வேண்டிய இடம்; அடிக்குறிப்பிற்கு எண்ணிடும் முறை; நூலட்டவணையில் இடம் பெற வேண்டியவை; நூலட்டவணையின் அமைப்பு; சில பொதுப்படை விதிகள்.

மேற்கோள் குறியீடு; வளைவு, சதுர அடைப்புக் குறிகள்.

அடிக்குறிப்பில் பயன்படுத்தப்படும் மரபுச் சொற்களும், சொற்றொடர்களும்; குறிப்பெடுக்கும் முறை; நூலகத்தைப் பயன்படுத்தும் முறை

பாகம் III (பிற்சேர்க்கை)

பொருளடக்கம் (மாதிரி); நூலட்டவணையில் இடம் பெற வேண்டுவன (மாதிரி); மேனாட்டுப் பல்கலைக் கழக ஆய்வு நெறிமுறைக் குறிப்புகளில் உள்ள சில பகுதிகள்; ஆய்வு நெறிமுறையை அறியப் பயன்படும் சில முக்கிய நூல்களின் பட்டியல்.

பாகம் I

கட்டுரை, சிறுகதை, நாவல், கவிதை எழுத எவ்வாறு சில அடிப்படை நியதிகளைப் பின்பற்றுகிறார்களோ அதேபோல், ஆய்வுரையினை எழுதவும் சில அடிப்படை விதிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. அவ்வாறு எழுதாவிட்டால், அதனை ஓர் ஆய்வுரையாக அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

மேனாட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், மாணவர்களும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இந்த ஆய்வுரை எழுதும் முறையினை ஒரு கலையாகவே வளர்த்து, அதற்கான சில அடிப்படை விதிகளையும் வகுத்துச் சென்றுள்ளார்கள். அந்த முறையைப் பின்பற்றி நம் நாட்டு அறிஞர்களும், மாணவர்களும் தற்காலத்தில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வருகிறார்கள்.

ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்காகவே இன்று பல மாணவர்கள் ஆய்வுரைகளை (Theses) எழுதுகிறார்கள். குறிப்பாக இத்தகு ஆய்வுரைகள் சில அடிப்படை விதிகளுக்கு உட்பட்டு எழுதப் பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் தேர்வாளரும் தம் கடமையை நேர்மையாக்ச் செய்ய இயலும். பொதுவாகத் தேர்வாளர் ஆய்வாளரின் தனித்தன்மையினைக் கட்டுப்படுத்த விரும்புவதில்லை. எனினும் ஆராய்ச்சி மாணவர் ஒரு குறிப்பிட்ட அளவிற்கேனும் வழக்கில் உள்ள நெறிமுறைகளை அறிந்து கொண்டு ஆய்வுரையினை எழுதத் தொடங்குவது சாலச் சிறந்ததாகும். அந்த அடிப்படை விதிகளைத் தெளிவாகவும், எளிமையாகவும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

ஆய்வுரைகள் வரலாறு, இலக்கியம், அறிவியல், மருத்துவம் போன்ற பல துறைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகின்றன. எடுத்துக் கொண்ட பொருளுக்கும் துறைக்கும் ஏற்ப ஆராய்ச்சி முறை மாறுபடும். வரலாற்றுத் துறையில் ஆய்வு நிகழ்த்துகின்ற மாணவர், தாம் தேர்ந்தெடுத்த பொருளுக்குத்

தொடர்புடைய நூல்களைப் படிப்பதோடன்றி, அக்காலத்தில் வெளியான செய்தித் தாள்களில் உள்ள செய்திகள், அரசாங்க அறிக்கைகள்,மக்களவையில் நிகழ்ந்த விவாதக் குறிப்புகள்ஆகிய வற்றைப் படித்தறிந்து ஆய்வுரையினை எழுத வேண்டியிருக்கும். அவரே தற்கால வரலாற்றைப் பற்றி எழுதுகின்றபோது, அந்த வரலாற்று நிகழ்ச்சியில் பங்கு பற்றிய அரசியல் தலைவர்கள், வரலாற்று ஆசிரியர்கள், தொண்டர்கள் ஆகியோரைப் பேட்டி கண்டு அவர்கள் தருகின்ற செய்திகளையும், விளக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு தம் ஆய்வுரையினை உருவாக்க வேண்டி இருக்கும்.

இலக்கியத் துறையில் ஆய்வுரைகள் எழுத முற்படுகின்றவர், ஓர் இலக்கிய ஆசிரியரைப் பற்றியோ, ஒரு கால கட்டத்தில் வாழ்ந்த சில எழுத்தாளர்களைப் பற்றியோ எழுதலாம். அவ்வாறு எழுதுகின்றபோது, அந்த மொழியின் இலக்கிய மரபை அறிந்திருப்பதோடன்றி,நூலாசிரியர்கள் தோன்றியகாலத்தின் சமுதாய, அரசியல் சூழ்நிலைகளையும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். இவைகளை எல்லாம் தெளிவாக அறிந்து ஆய்வுரையினை எழுதும் போதுதான் அதில் ஒருவகைத் தனித்தன்மையினைப் புலப்படுத்த முடியும்.

ஆய்வுரைக்கென அமைந்த நியதிகள் எல்லாவற்றையும் இக் கட்டுரையில் வரையறுத்துக் கூற இயலாது. அவ்வாறு கூறினும், எடுத்துக் கொண்ட துறைக்கும், ஆய்வுக் கருவிற்கும் (problem) அதனை அணுகும் முறைக்கும் ஏற்ப, இவ்விதிகள் மாறுவதனைக் காணலாம். எனினும் சில பொது விதிகளை ஆராய்ச்சி மாணவர்கள் பின்பற்றினால்தான் அவர்கள் எழுதுபவை முறையான ஆய்வுரைகளாக அமையும்.

எடுத்துக்கொண்ட ஆய்வுக்கரு எத்தகையதாக இருப்பினும் ஆய்வுரையின் முடிவு ஒன்றுதான். அதாவது, எழுதிய ஆய்வுரை ஒரு குறிப்பிட்ட பட்டத்திற்கு ஏற்றுக் கொள்ளப் படுவதோடன்றிப் பொதுவாக அறிஞர்களின் பாராட்டினையும் பெறத் தக்கதாக இருக்க வேண்டும்.

ஆராய்ச்சியின் முப்பிரிவுகள்

1. ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றித் தெளிவாக அறிதல் வேண்டும்.

2. ஆய்ந்தறிந்த கருத்துகளைத் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். ஆய்வுரை என்றால் பிறர் கருத்துகளை எல்லாம்

தொகுத்துத் தருதல் என்றே, பல நூல்களில் உள்ள கருத்துகளை வேறு நடையில் எழுதுவதென்றே பொருள் இல்லை. எந்நூலைப் படித்தாலும், அந்நூலில் ஆசிரியர் விளக்க முயல்கின்ற கருத்துகளை முதன் முதலில் தெளிவாக மனத்துள் வாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு அவர்தம் கருத்துகள் யாவும் தர்க்க ரீதியில் வெளிப்படுகின்றனவா எனச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். முன்பே படித்துத் தெளிந்த கருத்துகளுக்கு இவை எவ்வகையில் அரண் செய்கின்றன என்பதனையும், மாறுபடுகின்றன என்பதனையும் தெளிவாக விளக்க வேண்டும்.

3. ஆய்வுரை மேற்கொண்டதின் நோக்கத்தில் வெற்றி பெறுதல். பெரும்பாலோர்க்குப் பட்டம் பெறுவதே முதல் நோக்கமாக இருப்பினும், அவர்களால் அறிவின் எல்லை ஓரளவாவது விரிவடைகின்றது என்பதனை மறுப்பதற்கில்லை. இந்தச் சிறு நன்மையேனும் ஆய்வுரைகளால் ஏற்படவேண்டுமானல், அதற்குச் சில அடிப்படை விதிகளைப் பின்பற்ற வேண்டும். இவ்விதிகளில் சில மிகக் கடுமையானதாகவும் இருக்கும்; சில மனச் சோர்வைத் தருவதாகவும் இருக்கும்; ஆனல் பழகப் பழக அவை எளிமையாக அமையும்.

ஆராய்ச்சியின் ஐம்பெரும் நிலைகள்

i ஆய்விற்குரிய பொருளைத் தேர்ந்தெடுத்தல்

1. ஆராய்ச்சிக்குரிய பொருளை மேற்பார்வையாளரோடு கலந்தாலோசித்துத் தேர்ந்தெடுக்கலாம்.

2. ஆய்வாளர் தமக்கு நன்கு அறிமுகமான ஒரு பொருளைப் பற்றி அணுகி ஆராய விழைந்தால், அதனையே ஆய்விற்குரிய தலைப்பாக எடுத்துக் கொள்ளலாம்.

3. முன்பின் அதிக அறிமுகம் இல்லாத, ஆனல் ஆய்வாளருக்கு விருப்பமான, எந்தப் பொருளையும் ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுக்கலாம்.

மேற்கூறிய மூன்று முறைகளில் எந்த முறையைப் பின் பற்றினலும் ஓர் அடிப்படை நியதியை நினைவில் கொள்ள வேண்டும். ஆய்விற்காகத் தேர்ந்தெடுக்கும் பொருள் ஆய்வாளரின் உள்ளத்தைக் கவர்வதாகவும், விரும்பிச் செய்யத் தக்கதாகவும் அமைய வேண்டும்.

பெரும்பாலும் மேற்பார்வையாளர் தாம் செய்த ஆராய்ச்சியில் விடுபட்ட அல்லது விரிவாக ஆராயாத பகுதிகளைத் தம் மாணவர்க்கு ஆய்வுப் பொருளாகத் தருவதுண்டு. சிற்சில சமயங்களில் தமக்கு நன்கு அறிமுகமானதும், ஆனால் தாமே ஆராய்ச்சி செய்ய இயலாததுமாகிய கூறுகளைத் தம் மாணவர்க்கு ஆய்வுப் பொருளாக மேற்பார்வையாளர் தருவதுண்டு.

மேற்பார்வையாளர் தரும் தலைப்பில் ஆய்வு நடத்தும்போது அத்துறையில் அவருக்குள்ள ஆழ்ந்த புலமையும், அவர் சேர்த்த குறிப்புகளும், பயன்படுத்திய முறைகளும் மாணவர்க்குத் துணையாக அமைவதுண்டு. ஆய்வு செய்யும்போது ஏற்படும் சிக்கல்களை ஓரளவு எளிமைப் படுத்தவும் அவை உதவ வாய்ப்புண்டு. அதே நேரத்தில் தம் அறிவிற்கும், ஆற்றலுக்கும் ஏற்ற வகையில், ஆய்வுப் பொருளைச் சுதந்திரமாக அணுகும் உரிமை குறைய வாய்ப்புண்டு.

ஆய்வாளரே தாம் விரும்பும் பொருளை ஆய்விற்கு எடுத்துக் கொள்ளும் போது, இந்தச் சுதந்திரம் தடைப்பட வாய்ப்பில்லை. அப்போது மேற்பார்வையாளரின் ஆராய்ச்சி முறையை அப்படியே பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஆய்வில் புதிய போக்கைக் கையாள்வதோடல்லாமல், கண்ட முடிவுகளை உரிமையோடு எடுத்துக்கூற வழியுண்டு. இதுபோலவே ஆய்வில் ஏற்படும் சிக்கல்களையும், குழப்பங்களையும் தீர்ப்பதற்கு மேற்பார்வையாளரின் துணையையே நாடியிருக்காமல், ஆய்வாளரே தீர்த்துக்கொள்ளும் ஆற்றல் வளரவும் வாய்ப்புண்டு.

பொதுவாக மேற்பார்வையாளரின் துணையின்றி, ஆய்வாளரே ஆய்வுப் பொருளைத் தேர்ந்தெடுக்கும் திறமையும் ஆற்றலும் பெற்றிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

ஆராய்ச்சிக்குரிய பொருளைத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் சில ஆய்வுரைகளின் தலைப்புகள் மிகப் பொதுப்படையாக அமைதல் உண்டு. உதாரணமாகப் 'பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ் வளர்ச்சி' என்பதனைக் குறிப்பிடலாம்.

இப்பொருளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோமேயானுல் அந் நூற்றுண்டில் தமிழில் வெளிவந்த உரை நடை நூல்கள், கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள், சமய நூல்கள், செய்தித் தாள்கள் ஆகிய எல்லாவற்றையும் ஆராய வேண்டிய அவசியம் ஏற்படும். இதனுல் மேற்கொள்ளுகின்ற ஆராய்ச்சி மிக விரிந்து

செல்லும்; பல்கலைக் கழகங்கள் குறிப்பிடுகின்ற பக்க அளவிற்குள் முடிக்க இயலாமல் இடர்ப்பட நேரிடும். விரிவான வரலாற்று நூல் எழுதுவதற்குகந்த பொருளை, வரம்பிற்குட்பட்டு எழுதுகின்ற பல்கலைக்கழக ஆய்வுரைக்குக் கருப்பொருளாகக் கொள்ளக் கூடாது.

ஆதலின், தேர்ந்தெடுக்கும் தலைப்பு தெளிவான ஒரு வரையறைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாகக் கீழ்க்கண்ட தலைப்புகளைக் கூறலாம்.

1. பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழ்க் கவிதை பெற்ற வளர்ச்சி.

2. பத்தொன்பதாம் நூற்றுண்டில் தமிழகத்தின் அரசியல் நிலை.

3. இராமலிங்கர் தம் படைப்புக்களின் மூலமாக விளக்க முற்படும் வாழ்க்கைத் தத்துவங்கள்.

ii எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்பக் குறிப்புகளைச் சேகரித்தல்

ஆய்வுப் பொருளுக்கேற்ற குறிப்புகளைப் பல வகைகளில் நாம் சேகரிக்க இயலும். ஒரு குறிப்பிட்ட நூலாசிரியரைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றுல், அவர் எழுதிய நூல்களிலும், செய்தித் தாள்களில் வெளியான பேச்சுகளின் சுருக்கங்களிலும், அவருடைய கடிதங்களிலும், குறிப்பேடுகளிலும் இருந்து நமக்கு வேண்டிய கருத்துகளைத் திரட்டலாம். மேற்கூறியவைகளை 'முதல் நிலை ஆதாரங்கள்' அல்லது 'மூல ஆதாரங்கள்' (Primary source) என்று குறிப்பிடுவார்கள்.

எடுத்துக்காட்டாக, "திரு. வி. க. வின் நூல்கள் : ஓர் ஆராய்ச்சி" என்னும் பொருள் பற்றி ஆய்வு நடத்துபவர் திரு. வி. க. வின் நூல்களில் காணப்படும் கருத்துகளை அவர் எழுதிய நூல்களை மட்டும் மூலாதாரமாகக் கொண்டு ஆய்வுரை நடத்தலாம். அவ்வாறு ஆய்வு செய்யும்போது அந்நூல்களில் காணப்படும் அவருடைய சமய, சமுதாய, அரசியல் கருத்துகளில் எக்கருத்துப் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது என்பதனை முதலிலேயே தெளிவுபடுத்த வேண்டும். இந்தத் தெளிவு ஏற்படுமேயானுல் தலைப்பிலும் மாறுதல் நிகழ இடமுண்டு. "திரு. வி. க. வின் நூல்கள் : ஓர் ஆராய்ச்சி" எனப் பொதுப்

படையான தலைப்புத் தருவதற்குப் பதிலாக "திரு. வி. க. வின் சமயக் கொள்கை" என்றோ "திரு. வி. க. வின் அரசியல் சிந்தனை" என்றோ தலைப்புத் தரலாம். தலைப்பை வரையறை செய்துகொண்டே பிறகு தலைப்பிற்கு ஏற்ற வகையில் குறிப்புகளைச் சேர்க்க வேண்டும். மேற்கோளாக "திரு. வி. க. வின் அரசியல் சிந்தனை" என்னும் தலைப்பில் ஆய்வு செய்வதாக இருந்தால் அவர் நூல்களிலிருந்து மட்டும் குறிப்புகளைச் சேகரித்தால் போதாது. அவர் நடத்திய பத்திரிகைகள், அவர் பேசிய அரசியல் பேச்சுகள் இவைகளிலிருந்தும் குறிப்புகளைத் திரட்ட வேண்டும். அப்போதுதான் எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றி முறையான ஆராய்ச்சிக் கட்டுரையை உருவாக்க இயலும்.

பிற ஆதாரங்களைத் 'துணை ஆதாரங்கள்' (Secondary source) எனப் பொதுவாகக் குறிப்பிடும் வழக்கம் உண்டு.

திரு. வி. க.வைப் பற்றிப் பிறர் எழுதிய நூல்கள், கட்டுரைகள், ஆற்றிய சொற்பொழிவுகள், பாராட்டுரைகள், வாழ்த்துகள், அவர் நூலுக்குப் பிறர் தந்த மதிப்புரைகள் யாவற்றிலிருந்தும் குறிப்புகள் எடுக்கலாம். மேற்கூறியன யாவும் துணை ஆதாரங்களாகும்.

அடுத்து, திரு. வி. க.வின் காலத்தில் வாழ்ந்த இலக்கிய ஆசிரியர்கள், பேச்சாளர்கள், கவிஞர்கள், அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோரைப் பற்றி அறிவதோடன்றி, அவர்கள் வாழ்ந்த காலத்துச் சமுதாய, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளை விளக்குகின்ற நூல்களைத் தேர்ந்தெடுத்துக் குறிப்புக்களைத் திரட்ட வேண்டும். இந்த முறையை 'peripheral reading' என ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள்.

மேலும் திரு. வி. க. வின் காலத்தில் வாழ்ந்து, தற்போது உயிருடன் இருக்கின்ற அரசியல், தொழிற்சங்கத் தலைவர்கள், செய்தித்தாள் ஆசிரியர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரைப் பேட்டி கண்டு பல அரிய செய்திகளைத் திரட்டலாம். இவ்வாறு திரட்டிய ஆதாரங்களைப் பேட்டி கண்டு பெற்ற ஆதாரங்கள் (material gathered from interviews) எனக் குறிப்பிடுவார்கள்.

இவை தவிர, திரு. வி. க. அரசியல் தலைவராகவும், தொழிற் சங்கத் தலைவராகவும் இருந்த காரணத்தினால் அவரைப் பற்றிய சில செய்திகளைச் சென்னை ஆவணக் காப்பகத்திலிருந்து தேர்ந்தெடுக்கலாம். ஆவணக் காப்பகத்தில் உள்ள சமுதாயத் துறை (Public Department) பைல்களில் திரு. வி. க. அக்காலத்து

அரசியல், தொழிற்சங்க இயக்கங்களில் ஈடுபட்டு ஆற்றிய தொண்டைப் பற்றிக் குறிப்புகள் பல உள்ளன. இந்தக் குறிப்பு களை, ஆவணக் காப்பகக் குறிப்புகள் (Archieval Material) என்பர். இவ்வாறு பல்வேறு வகையில் ஆய்விற்குப் பயன் தரத் தக்க குறிப்புகளை விவேகமுடன் சேகரிக்க வேண்டும்.

iii எடுத்த குறிப்புகளைத் திறனாய்தல்

தொகுத்த குறிப்புகளைப் பலமுறை திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். அவ்வாறு படிக்கும்போது எழும் வினாக்களையும், அந்த வினாக்களுக்கு ஏற்ற விடைகளையும் தனித் தாள்களில் குறித்துக்கொள்ள வேண்டும். இது போலவே குறிப்புகளைப் படிக்கும்போது தோன்றும் புதிய கருத்துகளையும், சந்தேகங் களையும், புதிய விளக்கம் தேவைப்படும் பகுதிகளையும் குறித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் ஏன், எதற்காக எனக் கேள்விகளை எழுப்பி அதற்கான ஆதாரங்களையும் அப்போதைக்கப்போதே தெளிவாகக் குறித்துவைக்க வேண்டும்.

iv குறிப்புகளை வகைப்படுத்துதல்

எடுத்த குறிப்புகளைப் பலமுறை படித்துச் சிந்தித்த பிறகு, குறிப்பிட்ட ஒவ்வோர் இயலின் தலைப்புக்குத் தொடர்பான கருத்து களை எல்லாம் ஒன்றாகத் திரட்டி பல இயல்களாக (chapters) வகைப் படுத்த வேண்டும். அவ்வாறு வகைப்படுத்தும்போது ஓர் இயலுக்கும் மற்றோர் இயலுக்கும் கருத்துத் தொடர்பு அமையும் வகையில் முறைப்படுத்த வேண்டும். கால ஒழுங்கு அல்லது கால நியதி (chronological sequence) அமையும்படி வகைப் படுத்த வேண்டும். வரலாற்று ஆய்வுக் கட்டுரைகளில் கால ஒழுங்கினைத் தெளிவாக மனத்தில் கொண்டு குறிப்புகளை முறைப்படுத்த வேண்டும். கருத்துகள் தர்க்க ரீதியாக வெளிப்படும் வகையில் குறிப்புகளை வகைப்படுத்தினால் ஆய்வுக் கட்டுரை எழுதும் போது அதிக சிக்கல்கள் எழ வாய்ப்பில்லை. ஓர் இயலில் விவாதத் திற்கு எடுத்துக் கொண்ட பொருளுக்கு அரண் செய்யும் கருத்து களையும், மறுப்பாக அமையும் கருத்துகளையும் தனித் தனியாகத் தொகுத்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு, மேற்கொண்ட பொருளுக்கு ஒத்த கருத்துகளையும், மறுப்பாக அமையும் கருத்துகளையும் பலமுறை படித்து ஏன், எதற்காக எனக் கேள்விகளை எழுப்பி விடை காண வேண்டும். தெளிவான விடை பிறந்த பிறகு மேற்கொண்ட விவாதத்திற்கு அரண் செய்யும் கருத்துகளையும், மறுதலையாக அமையும் கருத்து

களையும் தர்க்க ரீதியாகக் கட்டுரை அமையும் வகையில் ஒழுங்குபடுத்த வேண்டும். குறிப்புகளை இயல்களாக வகைப் படுத்த சில மாதங்களைச் செலவிடுவதில் தவறில்லை. அதனால் ஆராய்ச்சி பற்றிய சிந்தனையில் தெளிவேற்படும். மேலும் ஆழ்ந்து சிந்தித்துக் குறிப்புகளை வகைப் படுத்துகின்றபோதே ஆய்வுரை ஒரு பொது உருவம் பெறுவதனை உணரலாம்.

V ஆய்வுரை எழுதுதல்

தெளிவாக வகைப்படுத்திய குறிப்புகளைக் கொண்டு ஆய் வுரை எழுதுவதில் சிக்கல்கள் குறைவு. முறையாகத் தொகுத்த குறிப்புகளை அப்படியே பெயர்த்து எழுதுவது ஆராய்ச்சியாகாது. குறிப்புகளிலிருந்து வெளிப்படும் கருத்துகளைத் தர்க்க ரீதியில் விவாதித்து எழுதுவதே நல்ல ஆராய்ச்சிக் கட்டுரையாகும்.

எடுத்துக் கூறும் கருத்துகள் முன்னுக்குப் பின் முரணாக அமையக் கூடாது. கருத்து வெளிப்பாடு ஆற்றொழுக்குப் போல் தடைப்படாமலும், ஒரு கால நியதிக்கு உட்பட்டும் அமைய வேண்டும்.

பொதுவாக, எடுத்த குறிப்புகளை நன்கு படித்து, சிந்தித்து, ஆராய்ந்த தன்மை வெளிப்படும்படியாகக் கட்டுரை அமைய வேண்டும். பலருடைய கருத்துகளின் பிழிவாக ஆராய்ச்சிக் கட்டுரை அமையாமல், ஆய்வாளரின் கருத்து வெளிப்பாடாகக் கட்டுரை அமைய வேண்டும்.

ஓர் இயலுக்கும் மற்றோர் இயலுக்கும் தொடர்பு அமையும் வகையில் ஆய்வு அமைய வேண்டும். பல இலக்கிய ஆய்வுரை களில் ஓர் இயலுக்கும் மற்றோர் இயலுக்கும் தொடர்பினை ஏற் படுத்துவது சற்றுக் கடினம். இத்தகைய கட்டுரைகளில் இயல் களுக்குள் தொடர்பில்லாவிட்டாலும், ஆய்வுக் கட்டுரையின் தலைப்புக்கு விளக்கம் தரும் வகையில், இயல்களின் உள்ளடக்கப் பொருள் அமைந்திருக்க வேண்டும்.

இவ்வாறு எழுதியதைப் பலமுறை படித்துத் திருத்த வேண் டும். சொற்றொடர்கள் ஒழுங்காக அமைந்து, கருத்துக் கோவை யாக வெளிப்படல் வேண்டும்.

எழுதும் நடை எளிமையாகவும், தெளிவாகவும், கருத்துச் செறிவுடனும், ஆற்றொழுக்குப் போலவும் அமைய வேண்டும்.

எவ்வாறு பலவகை நிறமும், மணமும் உடைய பூக்களை முறைப்படித் தொகுத்து, அழகிய மாலை ஆக்குகின்றார்களோ அதேபோலப் பலவகைக் கருத்துகளையும், மதிநுட்பத்துடன் தேர்ந்தெடுத்து, தெளிவான சொற்றொடர்களை படிப்பவர் உள்ளத்தில் பதியும் வண்ணம் ஆய்வுரையினை எழுத வேண்டும்.

பொதுவாக ஆய்வுரையில் மேடைப் பேச்சு நடையைக் கையாளக் கூடாது. எதுகை, மோனை அலங்காரங்கள் மிக அருகி வரலாம். எழுதும் நடையில் எளிமையும் (simplicity) தெளிவும் (clarity) இன்னோசையும் (euphony) அமைந்திருக்க வேண்டும். நன்னூலார் நூலுக்குக் கூறுகின்ற 'சுருங்கச் சொல்லல்', 'விளங்க வைத்தல்' போன்ற சில அழகுக்கூறுகள் இடம்பெறும் வகையில் ஆய்வுரை அமைய வேண்டும்.*

வாத பிரதி வாதங்கள் முறையாக அமைந்து, கருத்துச் செறிவோடு பத்திகள் உருவாக வேண்டும். பத்திகளில் கருத்து வளர்ச்சியும் விளங்க வேண்டும்.

கருத்துகள் கோவையாக அமைந்த பல பத்திகளே ஓர் இயலாக அமைகின்றது. பல இயல்கள் ஓர் ஆய்வுரையாக உருவாகின்றது.

ஆய்வுரை பற்றிய ஒரு விளக்கம்

மேற்கூறிய ஐந்து நிலைகளைப் பின்பற்றி உருவாகும் ஆய்வுரை பிற அறிஞர்கள் கூறிய கருத்துக்களின் தொகுப்பாக இராது. பல

*தரமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தமிழில் எழுதிய அறிஞர்கள் பலர் நம் நாட்டில் இருந்திருக்கிறார்கள். சிலர் தற்போதும் இருக்கிறார்கள். தமிழில் ஆய்வுரை எழுத முற்படுவோர் ஒவ்வொருவரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். அதே போல் ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், மறைமலையடிகள், அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளையும் படித்தல் சிறப்புடையதாகும். தர்க்க ரீதியான ஆய்வுக் கட்டுரை எழுத விழைவோர், பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூல்களை முறையாகப் படித்தாக வேண்டும். தமிழில் பல துறைகளுக்கு முன்னோடியாக விளங்கிய பேராசிரியர் மு. வரதராசனாரின் தமிழ் நெஞ்சம், ஓவச் செய்தி போன்றவை, தமிழிலக்கியங்களைப் புதிய பார்வையோடு அணுக வழி வகுக்கும். அண்மையில் நீதிபதி எம். எம். இஸ்மாயில் அவர்கள் எழுதிய "மழைப மன்றுடியார்" என்னும் கட்டுரை நுணுக்கமான ஆராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைவதோடு அல்லாமல் புராணங்களையும் புதிய கோணத்தில் பார்க்க வழி வகுத்துள்ளது.

நூல்களைப் பார்த்து எழுதிய ஒட்டு வேலையாகவும் அமையாது. அதற்கு மாருகப் பல்வேறு அறிஞர்களின் கருத்துகளை ஆய்வாளர் புதிய கோணத்தில் அணுகிய திறனையும், அவைகளைச் சீர் தூக்கிப் பார்த்த பான்மையினையும், சில வரன் முறைகளுக்கு உட்பட்டு எழுதிய ஆற்றலினையும், சிந்தனைத் தெளிவினையும், நுண்மான் நுழை புலத்தினையும் அந்த ஆய்வுரை வெளிப்படுத்தும். சுருக்கமாகக் கூறப்போனால் அது ஆய்வாளரின் சொந்தப் படைப்பாக விளங்கும்.

எது ஆய்வுரை அன்று?

1. பல கட்டுரைகளின் சுருக்கமோ, பல நூல்களின் சுருக்கமோ ஆய்வுரை ஆகாது.

2. பிறர் கருத்துகளை அணுகி ஆராயாமல் அப்படியே கோவையாகச் சேர்த்து எழுதுவதும் ஆய்வுரை அன்று.

3. பிற அறிஞர்களுடைய கருத்துகளை ஏற்பதாக இருந்தால் அதற்கான காரணங்களைத் தர்க்க ரீதியாக வெளிப்படுத்தியாக வேண்டும். இவ்வாறு சீர்தூக்கிப் பார்க்காமல், அவைகளைத் தொகுத்தளித்தால் அது வெறும் அறிக்கையாக விளங்குமே அல்லாமல், ஆய்வுரையாக அமையாது.

4. மேற்கோள்கள் பலவற்றை எவ்வளவு திறமையாக அடுக்கி எழுதினாலும், அது ஓர் ஆய்வுரையாக அமையாது. இதனால் மேற்கோள்களே ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில் இடம் பெறக் கூடாது என்பது கருத்தல்ல. ஒரு கருத்தை நிறுவவோ, மறுக்கவோ முற்படும்போது, மேற்கோள்கள் ஆய்வுரையில் இடம் பெற வேண்டும்.

5. தக்க அடிப்படையும், ஆதாரமும் இல்லாமல் வெளியிடப் படும் கருத்துக்கள் அடங்கிய உரையினை, ஒரு முறையான ஆராய்ச்சியாகக் கருதமாட்டார்கள்.

6. பிறருடைய கருத்துகளை நம் சொந்தக் கருத்தாக வெளியிடுவதும் ஓர் உண்மையான ஆராய்ச்சி ஆகாது. பிறர் கருத்தைப் பயன்படுத்துகின்ற இடங்களில் எல்லாம் அதற்கான அடிக்குறிப்புக்களைத் தர வேண்டும்.

ஆய்வுரை எழுதுவதால் ஏற்படும் பயன்கள்

1. ஒரு பொருளைப் பற்றிப் பல்வேறு வழிகளில் கருத்துக் களைத் தொகுக்கும் ஆற்றல் ஏற்படுகிறது.

2. தொகுத்த கருத்துகள் பலவற்றை முறைப்படுத்தி, வகைப் படுத்திச் சிந்திக்கின்ற மனப்பான்மை உருவாகின்றது.

3. நன்கு சிந்தித்துப் பெறும் புதிய கருத்துகளை மற்றவர் படித்துப் போற்றும் முறையில் எடுத்துக் கூறும் ஆற்றல் வளர் கின்றது.

4. தெளிவாகச் சிந்திக்கும் திறனும், கட்டுப்பாடோடு எழுதும் ஆற்றலும் ஏற்படுகின்றது.

ஆய்வுரையின் உருவ அமைப்பு

ஆய்விற்குரிய பொருள், அதனை அணுகும் முறை, இவற்றை ஒட்டி ஆய்வுரையின் அமைப்பு மாறுபடும். நிகழ்ச்சி விரிவுரை யாக அமையும் ஆய்வுரைக்கும் (narrative), பகுத்தாய்கின்ற (analytical) அல்லது methodological discussion ஆக அமையும் ஆய்வுரைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நிகழ்ச்சி விரிவுரை யாக விளங்கும் ஆய்வுரைகள் - குறிப்பாக வரலாற்று ஆய்வுரை கள்-கால ஒழுங்கிற்கு (chronological basis) உட்பட்டு இயங்கு வதனைக் காணலாம். இந்த விதி பகுத்தாய்கின்ற ஆராய்ச்சி களிலும், methodological ஆராய்ச்சிகளிலும் தளர்த்தப்படுவ துண்டு. இத்தகு ஆய்வுரைகளில் பல்வேறு கருத்துகளை எடுத்துக் காட்டுவதோடன்றி அவைகளை ஒட்டியும், வெட்டியும் பேசி ஆய்வாளர் தம் கருத்தை மிக நுட்பமாக வெளிப்படுத்தி எழுதுவ துண்டு.

நூலுக்கும் ஆய்வுரைக்கும் உள்ள வேறுபாடு

பதிப்பில் வெளியான நூலுக்கும், ஆய்வுரைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. நூலாசிரியர் தம் நூலைப் பொது மக்க ளுக்கோ, நிபுணர்களுக்கோ, அறிஞர்களுக்கோ, அன்றி வேறு யாருக்கு எழுதினாலும் சரி, அவர் பல உரிமைகளை எடுத்துக் கொள்ள இயலும். தம் மதி நுட்பத்தினையும், அறிவாற்றலையும் விளக்குவதற்காகப் புதிய போக்குகளையும், புதிய முறைகளையும் கையாளலாம். நூலில் பேசும் பொருளைப் பற்றித் தம்முடைய முடிந்த முடிபினைக் கூறலாம். அவ்வாறு கூறாமல் படிப்போரின் அறிவாற்றலுக்கு ஏற்ப முடிவு செய்யும்படி விட்டுச் செல்லலாம்.

இத்தகு உரிமைகளில் பல ஆராய்ச்சி மாணவர்க்கு இல்லை. ஏனெனில் அவர்கள் எழுதும் ஆய்வுரைகள் ஒரு குறிப்பிட்ட பட்டத்திற்காக எழுதப்படுபவை. ஆதலால் அப்பட்டத்தினைப் பெறுவதற்கான சில தகுதிகளை அவர்கள் எழுதும் ஆய்வுரைகள் பெற்றிருக்க வேண்டும். எனினும் சில கட்டுத் திட்டங்களுக்கு உட்பட்டுச் சில உரிமைகளை மாணவர்கள் எடுத்துக் கொள்ள இடமுண்டு. இந்த உரிமைகளைக் கையாள்வதில்தான் மாணவர்களின் தனித்தன்மையும் விளங்குகின்றது.

மேற்கோளாக ஆய்வுரைகள் எத்தகு வினாக்களை எழுப்புகின்றன என்பதனைத் தேர்வாளர்களோ, ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பற்றிக் கூறுகின்ற நூல்களோ நிர்ணயிப்பதில்லை. இந்த உரிமை மாணவர்க்கே உண்டு. மாணவர்கள் எழுப்பும் வினாக்களுக்கு, ஆய்வுக் கட்டுரையில் தெளிவான விடை காண முடிகின்றதா என்று பார்க்கும் உரிமை மட்டும் தேர்வாளர்களுக்குத் திண்ணமாக உண்டு.

ஆய்வுரையில் தேர்வாளர் எதிர்பார்ப்பன

ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட ஆய்வுக் கருப்பொருள்: இது ஆய்வுரையின் தலைப்பினால் மட்டும் தெளிவாவதில்லை. ஆதலின் முன்னுரையில் எடுத்துக் கொண்ட ஆய்வுக் கருப்பொருளைத் (problem) தெளிவுபட விளக்க வேண்டும். மேற்கோளாக 'மு. வ. வின் நூல்கள்; ஓர் ஆராய்ச்சி' என்னும் தலைப்பினை உடைய ஓர் ஆய்வுரைக்குத் தெளிவான முன்னுரை அவசியமாகும். ஏனெனில் ஆய்வுரை மு. வ. நூல்களின் இலக்கியத் தரத்தை மதிப்பிடப் போகின்றதா; அல்லது அந்த நூல்களால் வெளிப்படும் அவருடைய சமுதாய, அரசியல் சிந்தனைகளைச் சீர்தூக்கிப் பார்க்கப் போகின்றதா; அல்லது மு. வ. வின் மக்கள் நலக்கோட்பாட்டை (humanism) ஆராயப் போகின்றதா என்ற ஐயம் படிப்போர்க்கும், தேர்வாளருக்கும் ஏற்படுவது திண்ணம். ஆதலால் முன்னுரையில் ஆய்வுரையின் நோக்கம் என்ன (scope of the thesis) என்பதனை விளக்க வேண்டும்.

இரண்டாவதாக, முன்னுரையில் இத் தலைப்பினைத் தேர்ந்தெடுத்தற்கான காரணங்களை விளக்க வேண்டும். அக்காரணங்கள் பலவாக இருக்கலாம். அவைகளில் முக்கியமானவைகளைக் குறிப்பிடுவது நல்லது. உதாரணமாக இந்தப் பொருள் பற்றிய ஆராய்ச்சியினை இதுவரை யாரும் மேற்கொள்ளாமல் இருந்திருக்கலாம்; பல ஆய்வுரைகளும் வெளிவந்திருக்க

லாம் பல ஆய்வுரைகள் இருக்குமேயானுல் அவைகளைப் பற்றிக் குறிப்பிடுவது சிறப்பாகும். ஆராய்ச்சி செய்தோரின் பெயர், ஆராய்ச்சியின் தலைப்பு இவைகளை மட்டும் பட்டியல் போட்டுக் காட்டாமல் அந்த ஆராய்ச்சிகளின் பயனுக எழுந்த புதிய சிந்தனைகளையோ, புதிய கருத்துகளையோ, தவருன முடிவுகளையோ சுருக்கமாகக் குறிப்பிடுவது முறையாகும். இவைகளை எல்லாம் தேர்வாளர்கள் அறிந்தும் இருக்கலாம். அறியாமலும் இருக்கலாம். எனினும் ஆய்வுரைக்குத் தொடர்பாக நிகழ்ந்துள்ள ஆராய்ச்சிகளைத் தற்போதைய ஆய்வாளர் படித்திருக்கின்ருர் என்பதனையும், அதோடு அவை பற்றித் தெளிந்த கருத்தும், ஒருபால் கோடாத தன்மையும் பெற்றிருக்கின்ருர் என்பதனையும் நுட்பமாக விளக்கியாக வேண்டும்.

பல ஆய்வுரைகள் வெளிவந்த பொருள் பற்றி ஆராய்ச்சி நடத்துவோர் ஏன் அதே பொருளைத் தேர்ந்தெடுத்தார் என்பதனை விளக்க வேண்டும். அப்போது இதுவரை வெளியான விளக்கங்களில் பல தவருனவை என்ருே, அத் தவறுகளைப் பல புதிய ஆதாரங்களோடு எடுத்துக் காட்டி விளக்கந் தருவதே தற்போதைய ஆராய்ச்சியின் நோக்கம் என்ருே, இதே பொருளை முற்றிலும் புதிய கோணத்தில் பார்க்க இயலும் என்ருே குறித்தாக வேண்டும். இந்த முறையில் எழுதும்போது, முன்னிகழ்ந்த ஆய்வுரைகளின் கருப்பொருள்கள் ஒரு தொகுப்புரையாக முன்னுரையில் அமையும்.

இத்தகைய தொகுப்புரை (summary), கருத்துகளுக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் புதிய விளக்கம் தரமுயல்கின்ற ஆய்வுரைகளுக்கு மிகமிக இன்றியமையாததாகும். பலவகைப் பட்ட நிகழ்ச்சி விரிவுரை ஆராய்ச்சிகளில் (narrative type of theses) எடுத்துக்கொண்ட பொருள் பற்றிய கருத்துகளைக் கோவையாகச் சொல்லி வரும்போது, பரம்பரையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துகளை மறுக்க வேண்டிய நிலை ஏற்படும். அத்தகைய சமயங்களில் இத் தொகுப்புரையின் அவசியம் தெளிவாகும்.

எடுத்துக்காட்டாகச் சங்க இலக்கியங்களை ஆராய முற்படுபவர், சங்ககாலம் எது என்பதனை வரையறுத்துக் கொள்ள வேண்டும். சங்க காலத்தை வரையறுக்க முற்படுகின்றபோது அதன் காலம் கி. பி. இரண்டாம் நூற்ருண்டு என்போர் கூற்றையும், அதற்கு மாறுபட்டோரின் கூற்றையும் எடுத்துக்காட்ட வேண்டும். யார் கருத்தை ஏற்றுக்கொண்டாலும், மறுத்தாலும்

அதன் காரணத்தைத் தர்க்க ரீதியில் விளக்கி, ஆராய்ச்சி செய்வோர் தம் கருத்தை நிறுவ வேண்டும். அவ்வாறில்லாமல் ஒரு சாரார் கருத்தையே ஆய்வுரையில் நிலை நிறுத்த முயல்வதை நடுநிலை ஆராய்ச்சியாக ஒப்ப மாட்டார்கள்.

இறுதியாகப்பெறும் ஆய்வுரை முடிபுகள்

படிப்போரை ஆய்வுரைகள் அந்தரத்தில் விடக்கூடாது. இதனால் எல்லா ஆய்வுரைக்கும் முறையான ஓர் இறுதி இயல் அல்லது முடிப்புரை (formal concluding chapter) இருக்கவேண்டும் என்பதில்லை. சிற்சில சமயங்களில் ஆய்வுரை விளக்கும் முடிவுகளை, ஆய்வுக் கருவை அறிமுகப்படுத்தும் இயலிலேயே (introductory chapter) கலைத்திறமையோடு கூறிச் செல்லலாம். இன்னும் சில சமயங்களில் இயல்களின் தலைப்பும், அமைதியும், விவாதிக்கும் முறையும், ஆராய்ச்சி செய்வோர் உணர்த்த முற்படும் முடிபுகளை அப்போதைக்கப்போது கோடி காட்டிச் செல்வதும் உண்டு. எனினும், பல ஆய்வுரைகளுக்கு முடிப்புரை இன்றி யமையாததாக உள்ளது. இந்த முடிப்புரையினை ஆறிலிருந்து எட்டு பக்கங்களுக்குள் சுருக்கமாகத் தரலாம்.

எம்.ஏ.,எம்.லிட்., பட்டங்களுக்காகச் செய்யப்படும் ஆய்வுரைகளுக்கு முடிப்புரை மிக அவசியம் ஆகும். ஏனெனில் இந்த ஆராய்ச்சிகளினால் நிலைத்த முடிபுகள் உருவாக்குவதற்கு அதிக வாய்ப்பில்லை. ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பொருளின் ஒரு சில கூறுகளைப் பற்றிச் சில விளக்கங்களையும், ஒரு சில தெளிவான முடிபுகளையும் கூறி இருக்கலாம். அல்லது மேற்கொண்ட ஆராய்ச்சி, வழக்கில் உள்ள முடிவுகளில் சிலவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டியும் இருக்கலாம். அன்றி, இதுபோல மேலும் சில தொடர்பான ஆராய்ச்சிகள் நடத்தினால் முக்கிய ஐயப்பாடுகள் தெளிவடையும் என விளக்குவதாகவும் அமையலாம். இவைகள் எல்லாம் முறையாக முடிப்புரையில் இடம்பெற வேண்டும். அப்போதுதான் ஆய்வுரையும் முழுமை பெற்று விளங்கும்.

ஆய்வுரையின் இறுதி இயலை அல்லது முடிப்புரையைப் படித்து முடித்தவுடன் ''மேற்கொண்டு என்ன?'' என்ற கேள்வி தேர்வாளர்க்கும், ஆய்வுரையைப் படிப்போர்க்கும் எழுதல் இயற்கை. இந்தக் கேள்விக்கு விடை கூறும் முகமாக ஆய்வாளர் சில யோசனைகளை முடிப்புரையின் இறுதிப் பத்தியில் ஒரு சில வரிகளிலே கூறுவது சிறப்புடையதாகும்.

எடுத்துக்காட்டாக, ஒருவர் 'கண்ணதாசனின் கவிதைகளை' ஆராய்வதாக வைத்துக் கொள்வோம். அவர் கண்ணதாசனின் கவிதைகளில் காணப்படும் நிறை, குறைகளை எடுத்துக் காட்டி, இறுதியில் இருபதாம் நூற்றுண்டுக் கவிஞர்களில் ''கவிச் சக்கர வர்த்தி'' என்னும் பட்டத்திற்கு உரியவர் கண்ணதாசனே என்று கூறுவதாகக் கொள்வோம். இத்தகைய கருத்துகள் அடங்கிய ஓர் ஆய்வுரையினைப் படிக்கின்ற தேர்வாளர்களுக்கு இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பிற கவிஞர்களின் நினைவு வருவதோடன்றி, பாரதியார், பாரதிதாசன் இவர்களோடு ஒப்பிடும்போது கண்ணதாசனின் நிலை என்ன என்னும் வினவும் எழுதல் இயற்கை. இந்த வினவினுக்கு ஏற்ற விடையையும் ஆய்வுரையில் கொடுத்தாக வேண்டும்.

அதோடு, நெடுங்காலமாகக் 'கவிச் சக்கரவர்த்தி' எனப் புகழப்பட்டு வரும் கம்பனின் புலமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'கவிச் சக்கரவர்த்தி' என்னும் பட்டம் கண்ணதாசனுக்கு உண்மையிலேயே பொருந்துமா, பொருந்தாதா என்பதையும் திட்டவட்டமாக, ஒளிவுமறைவு இல்லாமல், ஆய்வுக் கட்டுரையில் குறித்தாக வேண்டும். இல்லையெனில் ஆய்வாளர் தம் ஆராய்ச்சியினை நடு நிலையோடு செய்யாமல், தாம் வாழும் காலத்தின் மாயைக்கு உட்பட்டு ஆராய்ச்சி செய்ததாகவே தேர்வாளர் முடிவுக்கு வருவார். இக்குற்றத்திற்கு ஆளாகாமல் ஆய்வாளர் தம்மைக் காத்துக் கொள்வது மிகமிக இன்றியமையாதது.

சில பொதுப்படையான விதிகள்

1. இயல்கள்

ஒரு குறிப்பிட்ட அளவு பக்கங்கள் எழுதியவுடன், ஓர் இயல் முடிந்து விட்டதாகக் கருதக் கூடாது. ஆய்வுப் பொருளின் ஒரு கால கட்டம் (a period of time) அல்லது ஒரு முக்கிய நிகழ்ச்சியின் முடிவு அல்லது ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய விவாத முடிவு (a stage in argument) இவைகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் இயலை முடிக்கலாம்.

ஓர் இயல் ஏறக்குறைய ஒரு முடிப்புரையைப்போல் அமையலாம். அல்லது இதுவரை விவாதித்த கூறுகளையும், கடந்து வந்த கட்டங்களையும் திரும்பப் பார்ப்பதுபோல் (retrospective glance) முடியலாம். அன்றிக் கேள்வி ஒன்றினை எழுப்பிவிட்டோ புதிய சிக்கல்களை எடுத்துக் காட்டியோ முடியலாம். ஓர் இயலின் முடிவு எத்தகையதாக இருந்தாலும், அந்த முடிவே ஒரு வகையில்

அடுத்த இயலில் பேசப்பட இருக்கும் பொருளின் தொடக்கத்திற்குக் காரணமாக இருக்கவேண்டும். கால ஒழுங்கைத் தழுவி எழுதுகின்ற ஆய்வுரைகளில் (chronological narratives) ஒவ்வொரு கால கட்டத்திலேயும் ஓர் இயலாக அமைத்துக் கொண்டாலும், அதற்கான காரணம் எழுதும் போக்கினுலேயே உணர்த்தப்பட வேண்டும்.

2. அடிக்குறிப்புகள்

அடிக்குறிப்புகளுக்குத் திட்டவட்டமான விதிகள் கூறுவது சற்றுக் கடினம். விவாதத்திற்கு இன்றியமையாத பகுதிகள் எதுவும் அடிக் குறிப்பில் இடம் பெறக் கூடாது என்பது பொது விதி. மூலப் பகுதியில் (body of the text) காட்டப்படும் ஆதாரங்களுக்கான விவரங்கள் அடிக் குறிப்பில் கட்டாயம் இடம்பெற வேண்டும். நடைமுறையில் இந்த விதியினைக் கடைப்பிடிப்பது சற்றுக் கடினம். எனினும் அடிக் குறிப்புக் கொடுக்க வேண்டிய சில முக்கிய இடங்களாவன :

1. எடுத்தாண்ட நூல், கட்டுரை பற்றிய விபரம் அடிக் குறிப்பில் அமைய வேண்டும்.

2. ஓரியலில் நிருபித்த கருத்துகளை வேருரியலில் பயன் படுத்தும்போது, முதலில் எடுத்தாளப்பட்ட இயலின் எண், பக்கம் இவை அடிக்குறிப்பில் இடம்பெற வேண்டும்.

3. மேற்கோள் எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரம்.

4. இயலுக்குத் தொடர்பான விவாதங்களாக இருக்கலாம், ஆனல் அதே நேரத்தில் இயலில் உணர்த்த முற்படும் கருத்துகளுக்கு மிக முக்கியமானதாக இல்லாமல் இருக்கலாம். உதாரணமாக, ஒரு பொருள் பற்றிப் பல ஆசிரியர்கள் உணர்த்திய பல்வேறுபட்ட கருத்துகளை மிகச் சுருக்கமாக அடிக்குறிப்பில் கொடுக்கலாம்.

5. ஒரு கருத்தை நிறுவ முற்படும்போது சிற்சில சமயங்களில் கூடுதலான சான்றுகளை அடிக்குறிப்பில் காட்டலாம்.

6. இயலுக்கு நெருங்கிய தொடர்பில்லாத கருத்தாக இருந்தாலும், அக்கருத்து ஆய்வுரைக்குத் தொடர்பான துறைகளில் உள்ள அறிஞர்களுக்குப் பயனுடையதாக இருக்குமேயானல் அடிக்குறிப்பில் அதனைத் தரலாம்.

7. ஒரு நூலின் காலத்தை நிறுவுவதற்கோ, ஒரு நூலுக்கு இவர்தாம் ஆசிரியர் என நிறுவுவதற்கோ விரிவான அடிக் குறிப்புகள் தரலாம்.

இவ்வாறாக அடிக்குறிப்பில் இடம் பெற வேண்டிய செய்தி கள் பல உண்டு. பொதுவாக ஆய்விற்கு அடிப்படையான சான்றுகளை அடிக்குறிப்பில் தரவே கூடாது.

3. ஆய்வுரையில் தன்மை ஒருமையினைப் பயன்படுத்தும் முறை

பொதுவாக, ஆய்வுரைகளில் தன்மை ஒருமையினைப் பயன் படுத்தக்கூடாது என "ஆராய்ச்சி நெறி முறைகள்" பற்றி நூலெழுதிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். இந்த விதியினை மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டும். ஏனெனில் தன்மை ஒருமையினை அறவே கையாளக் கூடாது என உறுதி யாக நம்பிக் கொண்டு செயப்பாட்டு வினையில் சொற்றொடர்களை அமைத்து நடையழகையும், கருத்தொழுக்கையும் கெடுத்து விடுவதுண்டு. ஆதலின் தோற்றுவாய், அடிக்குறிப்பு போன்ற இடங்களில் தன்மை ஒருமையினைப் பயன்படுத்துவதில் தவறில்லை எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். எனினும், இயல்களில் தன்மை ஒருமையினை விலக்குவது போற்றத் தக்கது.

இங்கும் இவ்விதியினைப் பின்பற்றும்போது, கருத்தொழுக்கும் நடையழகும் கெடும் என்றால் தன்மை ஒருமையினைப் பயன் படுத்துவதில் தவறொன்றும் இல்லை.

ஆய்வுரையின் பொது அமைப்பு

1. ஆய்வுரையின் தலைப்பு அமைந்த பக்கம்.

2. தோற்றுவாய் (preface) : இது அவசியமானால் அமைய லாம். ஆய்வுரையினைச் செம்மையாக எழுதி முடிக்க உதவி யோர்க்கு இப்பகுதியில் நன்றி தெரிவிக்கலாம். ஆராய்ச்சிக்கு அடிப்படையாக உதவக் கூடிய கையேடுகள், ஓலைச்சுவடிகள், கடிதங்கள் இவைகளை வழங்கியோர்க்கு நன்றி தெரிவிக்கலாம். அச்சிட்டு வெளியான சில நூல்களில், ஆய்வுக்கரு பற்றிய விளக் கங்களைத் தோற்றுவாயிலேயே தந்திருப்பார்கள். பொதுவாக இவை யாவும் முன்னுரையிலேயே (introductory chapter) இடம் பெறுவது நல்லது.

3. பொருளடக்கம் : இயலுக்கு ஏற்ற தலைப்புகள் இங்கு இடம் பெறுதல் வேண்டும். தலைப்புகள் இயலில் பேசப்படும் பொருளைப் பிரதிபலிக்கின்ற முறையில் அமைவது சிறப்பாகும்.

4. குறுக்கு விளக்கப் பட்டியல் (table of abbreviations). ஆய்வுரையில் அடிக்கடி எடுத்துக் கையாளப்படும் நூல்கள், அரசாங்க உத்தரவுகள், (Government G.O.'s) இவைகளையே குறுக்குதல் வேண்டும்.

5. முன்னுரை : இயல் ஒன்று.

சில ஆய்வுகளுக்கு முன்னுரை தேவையில்லை. ஆனால் பல வற்றிற்குத் தேவைப்படுகிறது. முன்னுரை மிகச் சுருக்கமாக அமைந்தால் அதனை வெறும் முன்னுரை என்றே குறிக்கலாம். விரிவாக இருந்தால் அதனையே இயல் ஒன்று எனக் குறிக்கலாம்.

6. ஆய்வுரையைப் பல இயல்களாகப் பிரித்தல்.

7. முடிப்புரை.

8. பின்னிணைப்பு (appendices) தேவைப்பட்டால் இணைக் கலாம். ஆய்வுரைக்குத் தொடர்பான கடிதங்கள், அரசாங்க உத்தரவுகள், இயல்களில் வராத விரிவான விளக்கங்கள், ஆவணப் பத்திரங்கள், அட்டவணைகள் ஆகியவற்றை இப்பகுதி யில் இணைக்கலாம்.

9. மேற்கோள் நூற்பட்டியல்.

10. நிலப்படங்களும் விளக்க வரைவுப் படங்களும் இடம் பெறல்.

ஓர் ஆய்வுரையினை இப்படித்தான் எழுத வேண்டும் என்று பொதுவாக அறுதியிட்டுக் கூற இயலாது. ஆனால் ஆய்வுரையினை எழுதும்போது தவிர்க்க வேண்டிய சில கருத்துகளை மேற்கோள் காட்டி விளக்கலாம்.

எடுத்துக்காட்டு : 1

ஆய்வேட்டினைச் சிறுகதை எழுதும் பாணியில் தொடங்கக் கூடாது. அவ்வாறு தொடங்கிய ஆய்வுரையின் ஒரு பகுதி இதோ :

"சின்னஞ்சிறுமி புதிதாகப் பள்ளிக்குச்
செல்லுகிறுள்; புதிய ஆடை; புதிய
தோள்பை; புதிய பொருள்கள்; உள்ளத்
தில் புத்துணர்வு; இந்நிலையில் ஆர்வத்தோடு
பள்ளிக்குச் சென்ற சிறுமி பாடம்
படிப்பதில் உள்ள சிரமத்தை உணர்ந்தபின்
போக மறுக்கிருள்; அழுகிருள்.
என்றுலும், பெற்ருேர் சமாதானம் செய்து
நாள்தோறும் பல ஆறுதல் வார்த்தைகளைப்
பேசிப் பாடம் படிப்பதில் உள்ள சிரமத்தை
மறக்கச் செய்து கொஞ்சம் கொஞ்சமாக
அச்சிறுமியைப் படிக்க வைப்பது போலத்
தான் ஆய்வுப் பணியில் முதன் முதலாக
நுழைந்த என் நிலையும் இருந்தது."

கோ. தான்யா, **இருபதாம் நூற்ருண்டுத்தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம்,** பி.எச்.டி. ஆய்வேடு: சென்னைப் பல்கலைக் கழகம், 1979, ப 1.

எடுத்துக்காட்டு : 2

ஆய்வேட்டில் பொதுவாக மேடைப் பேச்சுப் பாணியினைக் கையாளக் கூடாது. அவ்வாறு அமைந்த ஆய்வுரையின் ஒரு பகுதி இதோ :

"புத்தம் புதிய தலைப்பு; புதிய வழியில்
புதிய பார்வையில் ஆய்வதற்குரிய
பணிப் பொறுப்பு; மார்க்சியத் தத்துவம்
பற்றி அறியாத முழுத் தவிப்பு."

கோ. தான்யா. **இருபதாம் நூற்ருண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம்** பக். 1

எடுத்துக்காட்டு : 3

பொதுவாக உரையாடல்களை ஆய்வேட்டின் "பின் இணைப்பு" என்ற பகுதியில் சேர்ப்பதுதான் முறையானது. அவ்வாறில்லாமல் நிகழ்த்திய உரையாடல் முழுவதனையும் மூலப்பகுதியில் இணைத்துள்ளதற்கான எடுத்துக்காட்டு இதோ :

பொறியியல் தொழிலாளி திரு. டி. சண்முகம் அவர்களுடன் 3-10-77 அன்று நடத்திய உரையாடல் :

தான்யா : சோசலிசக் கொள்கை என்றால் என்ன?

சண்முகம் : ஏழை, பணக்காரர் வித்தியாசமின்றி இருத்தல்.

தான்யா : சோசலிசம் எல்லா நாட்டிலும் இருக்கிறதா?

சண்முகம் : இல்லை.

தான்யா : ருஷ்ய நாட்டின் சோசலிசம் உண்மையா?

சண்முகம் : ஆம்.

தான்யா : எப்படி?

சண்முகம் : உணவு, உடை, இருக்குமிடம், எதிர்கால உத்தரவாதம் உண்டு.

தான்யா : பேச்சுரிமை இல்லையே?

சண்முகம் : இங்கு நச்சிலக்கியம் படிக்க நாம் எப்படி அனுமதிப்பதில்லையோ அதுபோல சமூக முன்னேற்றத்திற்குத் தடையான செய்திகளைப் பேச அங்கு அனுமதிப்பதில்லை. சமுதாய நிலைமை முன்னிட்டே - சமூக முன்னேற்றம் குறித்தே உரிமைகள் கொடுக்கப்படுகின்றன. அதுவே உண்மையான சுதந்திரமும் ஆகும்.

....

தான்யா : சோசலிச ஆட்சியின் பெருமைகள் என்ன?

சண்முகம் : சொத்துரிமை இல்லாததால் எந்தவித முறையற்ற தொழிலையும், முறையற்ற செயலையும் செய்ய இயலாது. சோசலிச சமுதாயமில்லாத அரசமைப்பில், எதிர்கால உத்தரவாதமில்லாததால் குடும்பப் பிரச்சனை, எதிர்காலம் பற்றிய கவலைகள், தன்னுடைய முதுமைக் காலத்திய கவலைகள் இதனால் தெரிந்தும் தெரியாமலும் செல்வம் குவிக்க முனைதல் ஆகிய இது போன்ற நிலைமைகள் வளருகின்றன. சோசலிச நாட்டில் இது போன்ற நிலைமை இல்லை. முதலாளித்துவ நாட்டில் தனி ஒருவனின் துன்பத்திற்கு ஒருவரும் துணை வருவதில்லை. சோசலிச நாட்டில் தனியொருவன் துன்பத்திற்கு நாடே துணை வரத் தயாராக இருக்கிறது. ஏன்?

'ஒவ்வொருவரும் எல்லோருக்கும்' என்கிற உணர்வோடு செயல்படுகிறார்கள்.

தான்யா : நம் இந்தியாவுக்குச் சோசலிசம் வருமா? வருவது பொருந்துமா?

சண்முகம் : வரும் — வந்தால் முன்னேறும்.

தான்யா : வரும் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?

சண்முகம் : வேலையில்லாத் திண்டாட்டம், நாளுக்கு நாள் விலைவாசி ஏற்றம், வாங்கும் சக்தி குறைதல், ஜனங்களிடம் பணமின்றித் தவித்தல், பணமெல்லாம் குறிப்பிட்ட சில முதலாளிகளிடம் சென்று சேருதல் போன்ற சமுதாய நிலைமைகள் புரட்சி வருமென்று எச்சரிக்கின்றன.

....

கோ. தான்யா, **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம்,** ப-ள் 36-39.

உரையாடல் முழுவதனையும் எழுதுவதற்குப் பதிலாகப் பொறியியல் தொழிலாளி ஒருவருடன் நடத்திய பேட்டியின் மூலமாக அவருக்குள்ள விழிப்புணர்ச்சியினை அறிவதோடு அல்லாமல், அவர் மார்க்சியக் கொள்கைகளை எந்த அளவிற்குப் புரிந்து கொண்டுள்ளார் என்பதனையும் உணர முடிகின்றது என்பதனைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

தற்போது தமிழில் வெளிவரும் ஆய்வேடுகள் பலவற்றில் ஒவ்வோர் இயலுக்கு இறுதியிலும் ஒரு முடிவுரை அமைந்துள்ளது. பொதுப்படையாகக் கூறப்போனால் அத்தகைய முடிவுரை மிகையானதே. அவ்வாறு எழுதும் முடிவுரைகளில் கருத்துச் செறிவோ புதுமையோ இல்லை.

எடுத்துக்காட்டு

1. பண்டைத் தமிழர்கள் நிலத்தை நானிலமாகப் பகுத்துப் பெயரிட்டதும் இயற்கையை உணர்ந்தே செய்யப்பட்டது என்பதும், அஃது இன்றைய அறிவியலின் ஐவகைப் பிரிவிற்கும் இயைந்துள்ளது என்ற உண்மையும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

2. பாலை என்பது பருவத்தால் தோன்றும் நிலையே அன்றிப் பாலை என்பதோர் நிலமில்லை என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

3. நானிலங்களிலும் விளை நிலங்களை அவர்கள் குறிப்பிடும் மரபுப் பெயர்கள் கொண்டு அவர்தம் பயிர்த் தொழில் தொன்மையும், தெளிவும் உணர்த்தப்பட்டுள்ளன.

....

6. பட்டறிவைப் பயன்படுத்தி மழையின் இயக்கத்தைக் கண்டு மழைப் பொழிவை அறியும் நுட்பத்தை அறிந்திருந்தனர்,

7. சூழலுக்கு ஏற்ப இயற்கை நீர் நிலைகளைப் பயன்படுத்திப் பயிர் விளைவித்துக் கொண்டனர்.

8. குடிமக்களுக்கு நீர் நிலைகளை உருவாக்கிக் கொடுப்பது மன்னனின் கடமை என்பது அறிஞர்களால் வாய்ப்புள்ள போதெல்லாம் வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

9. அரசே நீர் நிலைகளை அமைக்க வேண்டும் என்றதால், நீர் நிலைகள் தனி மனித உடைமையாகக் கருதப்படாமல் நாட்டின் பொதுவுடமையாகக் கருதப்பட்டது.

....

இல. செ. கந்தசாமி, **தமிழர் வேளாண்மை - மரபுகள் சங்க காலம்**, பிஎச்.டி. ஆய்வேடு, திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி, 1985, ப-ள். 58 - 60.

ஆய்வேட்டின் முடிவுரை பிரசாரபாணியில் அமையக்கூடாது. காலத்தை வென்று வாழ்கின்ற திருக்குறள் போன்ற நூல்கள் உலகில் உள்ள பல்வேறு மொழிகளிலும் உள்ளன. ஆதலால் ஆய்வுரையில், "திருக்குறளை அவர் (ஆலிவர் இரெய்சர்) படிக்க நேர்ந்தால், தட்டாமல் அதனையே உலகோரெல்லாம் பயன் படுத்தக் கூடிய 'மனிதப் பற்றுச் சட்ட நூல்' ஆக ஏற்றுக்கொள்ளு மாறு பரிந்துரை செய்வார். 'மனிதத் தகுதி'களைக் காத்திடத் திருக்குறள் ஒன்றே வழிகாட்ட வல்லதாய் விளங்குகிறது", என எழுதுவதை அறிஞர்கள் ஒருதலைப்பட்ட பிரசாரமாகக் கருது வார்கள்.

எடுத்துக்காட்டு :

"திருக்குறள், அரிய கருத்துகளை வழங்கும் ஒப்பற்ற நூல். வற்றாத ஒரு நீர் ஊற்றுச் சுனை. வேண்டுவோர் வேண்டும் பொழுதெல்லாம் நீரை முகந்து கொள்ளலாம்; நீரை உண்டு வேட்கையைத் தணித்துக் கொள்ளலாம் (அறவுரைகள் வழி நின்று மனக்கோணலை நிமிர்த்திக் கொள்ளலாம்). விரும்புவோர் அவ்வாறு செய்வதை யாரால் தடுக்க முடியும்? மனிதத் தன்மை, மனிதனிடம் நிலை பெற்றிருக்க வழியைக் காட்டும் நூல் - வழி காட்டி, அது ஒன்றேயாம். மனிதர்களாக வாழ விரும்புகிறவர்கள் அதனைக் கற்றுத் தெளிந்தாலொழிய உலகில் செம்மையுடன் (மனச் செம்மை) வாழ வழி தோன்றாது. அதன் மாண்பு அளவிடற்கரியது. எனவே உலகோர் அனைவரும் அதனைக் கசடு அறக் கற்க வேண்டும்; கற்ற பின்னர் அது காட்டும் அரிய அறநெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டும்."

கோ. இராமச்சந்திரன், **திருக்குறளில் மனித நலக் கோட்பாடு,** பிஎச். டி. ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம். சென்னை, 1977.

ஆய்வுக் கட்டுரையில் கருத்துகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் உணர்த்த வேண்டும். ஓர் இயலில் கூறிய அடிப்படைச் செய்திகளை அடுத்தடுத்து வரும் இயல்களில் திரும்பத் திரும்பக் கூறுவது நன்னூலார் கூறிய "கூறியது கூறல்" என்னும் குற்றத்துட்படும். இதற்கோர்

எடுத்துக்காட்டு

"காதல் வாழ்வினைப் பாடுபொருளாகக் கொண்டவை அகப் பொருள் நூல்களாகும்; காதலல்லாத பிறவற்றைப் பாடுபொருளாகக் கொண்டவை புறப்பொருள் இலக்கியங்களாகும். பத்துப்பாட்டில் குறிஞ்சிப் பாட்டு, முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகியவை அகப்பொருட் பாடல்கள்; திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம் ஆகியவை புறப்பொருட் பாடல்கள். எட்டுத் தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவை அகப் பொருள் நூல்கள்; பதிற்றுப் பத்து, புறநானூறு ஆகியவை புறப் பொருள் நூல்கள். பரிபாடலில் திருமாலைப் பற்றியனவும், செவ்வேளைப் பற்றியனவுமாக அமைந்துள்ள பாடல்கள் புறப்பொருள்

சார்ந்தவை; வையை பற்றி அமைந்துள்ள பாடல்கள் அகப் பொருள் சார்ந்தவை.''

தோற்றுவாய் — ப. 9.

''எட்டுத் தொகை நூல்களில் அகநானூறு, ஐங்குறு நூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை ஆகிய ஐந்தும் அகப் பொருள் நூல்களாகும். பதிற்றுப்பத்து, புறநானூறு இரண்டும் புறப்பொருள் நூல்களாகும். பரிபாடலில் அகம், புறம் ஆகிய இரு பிரிவினைச் சார்ந்த பாடல்களும் இடம் பெற்றுள்ளன.''

''பத்துப் பாட்டில் குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, முல்லைப் பாட்டு, நெடுநல் வாடை ஆகிய நான்கு பாடல்கள் அகப்பொருள் பாடல்களாகும்.''

இயல் —3, ப. 56.

''எட்டுத் தொகை நூல்களில் புறநானூறும், பதிற்றுப் பத்தும் புறப்பொருள் பற்றியனவாகும்; பரிபாடலில் திருமாலுக்கும் செவ் வேளுக்குமுரிய பாடல்கள் புறப்பொருள் சார்ந்தனவாம். பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை பொருநராற்றுப் படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய ஐந்து ஆற்றுப்படைப் பாடல்களும், மதுரைக் காஞ்சியும் புறப் பொருள் உணர்த்துவன.''

இயல் 5, ப. 150.

ஆய்வேட்டில் முடிவுரையினை நன்கு சிந்தித்து எழுத வேண்டும். பல்வேறு இயல்களில் கூறியபுதிய விளக்கங்களையோ கருத்துகளையோ கோவையாகப் படிப்பவர் உள்ளத்தில் பதியும் வண்ணம் எழுத வேண்டும். மேனாட்டு இலக்கிய ஆசிரியர்களின் கருத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்திருந்தால் அந்த ஆய்வின் வெளிப் பாடாக எழுந்த கருத்துக்களைப் படிப்பவர் உள்ளம் கவரும் வகையில் எழுத வேண்டும். பொதுவாக முடிவுரையை படித்தால், ஆய்வேடு எந்தப் பொருளை, எந்த நோக்கில் ஆய்ந்துள்ளது என்னும் தன்மை இயல்பாக வெளிப்படல் வேண்டும். ''சங்க இலக்கியத்தில் கற்பனை'' என்னும் ஆய் வேட்டில் அமைந்த முடிவுரை மேலே கூறிய கருத்துகளுக்கு இயையாத வகையில் அமைந்துள்ள தன்மையினைக் காண்க.

எடுத்துக்காட்டு :

''சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழர் வாழ்வியலை உணர்த்தும் மூலங்களாகத் திகழ்கின்றன. அவர்களுடைய

காதல், வீரம் ஆகிய உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாக அவை விளங்குகின்றன. தனி மனித வாழ்வினையும் சமுதாய வாழ் வினையும் விளக்கும் திறம் பெற்றவனவாக இருக்கின்றன. எனவே, பழந்தமிழர் வாழ்க்கை நிலைகளை ஆராயப் புகுவார்க்குச் சங்க இலக்கியங்களே முதன்மை மூலங்களாகத் திகழ்கின்றன.

"சங்க இலக்கியங்கள் இலக்கியக் கலைக்குரிய எல்லாச் சிறப்புக்களையும் ஒருங்கேபெற்றவையாம். இலக்கியத் திறனாய்வுத் துறையில் பெரு வளர்ச்சி பெற்றிருக்கும் மேலை நாட்டினர் வியந்து போற்றும் சுவையும் பெருமையும் உடையனவாக அவை விளங்குகின்றன.

"சமுதாயவியல் ஆராய்ச்சிக்கு அரிய மூலங்களாகத் திகழ் கின்ற சங்க இலக்கியங்கள் கலையியல் ஆராய்ச்சிக்குப் பெரிதும் வாய்ப்பளிப்பனவாக விளங்குகின்றன. கலைகள் பலவற்றுள்ளும் பெருஞ்சிறப்பு வாய்ந்ததாகப் போற்றப் பெறும் இலக்கியக் கலைக்குச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டாகத் திகழக்கூடிய சிறப்புடையவை. முருகியல் அழகினை முழுமையாகப் பெற்றவை அவை. ஆராய்ச்சி கரையற்ற கடல் போன்றது. சங்க இலக்கியங்களின் துணை கொண்டு அக்கால இலக்கிய மரபுகளை ஆராயலாம். இலக்கியத்திற்குரிய அடிப்படைப் பண்புகள் எல்லாவற்றிலும் சங்க இலக்கியங்கள் ஒப்பற்ற சிறப்புடையனவாக ஒளிர்தலை விளக்குதற்குத் தனித்தனியே ஆராய்ச்சிகள் நிகழ்த்தப் பெறலாம். சங்க இலக்கியங்களின் மொழி யமைப்பினை இன்றைய மொழியியல் அறிவின் துணையோடு ஆராய்ந்து வெளிப் படுத்தலாம்.

"இலக்கியத்தின் அடிப்படைப் பண்பாக அமைந்து, அதற்குச் சுவையூட்டும் 'கற்பனை', சங்க இலக்கியத்தில் சிறந்து விளங்கும் நிலை பொது வகையாக இங்கு ஆராயப் பெற்றுள்ளது. இத் துறையில் மேலும் ஆய்வு சிறப்புடன் மேற்கொள்ள நல்ல வார்ப்புகள் உள்ளன. முதற்பொருளைப் பற்றிய கற்பனைகளைப் பற்றி மட்டும் ஆய்வு நிகழ்த்தலாம். கருப்பொருள்களில் உயிரினங் களைப் பற்றிய கற்பனைகளை மட்டும் ஆய்வுக்குரிய மூலமாகக் கொள்ளலாம். செடி, கொடி, மரங்கள் பற்றிய கற்பனை குறித்துத் தனியாக ஆய்வு நிகழ்த்தலாம். இத்தகைய ஆய்வுகளின் ஒரு சிறு கூறாக அமைந்துள்ள இவ்வாய்வு நூல், அவற்றுக்கு அடிப் படையாகக் கொள்ளக் கூடிய வகையில் விளங்குகின்றது."

சங்க இலக்கியத்தில் கற்பனை பிஎச்.டி. ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1977, ப-ள் XVI - XVII

மு. வரதராசனின் நூல்களைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர்கள் அவர் எழுதிய நூல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நிகழ்த்துவதில் பயனில்லை. அவருடைய வாழ்க்கை வரலாற்றை மட்டும் மேற்போக்காகக் கூறிச் செல்வதிலும் உபயோகமில்லை. அவருடைய வாழ்க்கையில் நடந்த சில சாதாரண நிகழ்ச்சிகள், உள்ளத்தை உலுக்கிய சம்பவங்கள் எந்த அளவிற்கு அவருடைய சிந்தனையை, எண்ணத்தை, போக்கை மாற்றியிருக்கின்றன என்று அறிய வேண்டும். அதற்காக அவரோடு நெருங்கிப் பழகிய அவருடைய நண்பர்கள், அவருடைய ஆசிரியத் தோழர்கள், அவரிடம் படித்த மாணவர்கள் ஆகிய பலரையும் சந்தித்து "மு.வ." என்னும் மனிதரை, பேராசிரியரை சிந்தனையாளரை, எழுத்தாளரை அறிய முற்பட வேண்டும். இதோடு அவர் நெருங்கிப் பழகிய சிலர் வணிகத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும், சமயத் துறையிலும் உள்ளனர். அவர்களையும் பேட்டி கண்டு மு. வ.வைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இவை மட்டுமின்றி அவர் படித்த பல்வகையான நூல்களைப் பற்றியும் அறிய முற்பட வேண்டும். அப்போதுதான் மு.வ.வின் நூல்களைப் பற்றித் தெளிவாக ஆராய இயலும்.

மு. வ. தமிழ்ப் பேராசிரியராக இருந்த போதிலும் பல ஆங்கில நூல்களைத் தெளிவாகப் படித்தவர். தற்கால ஆங்கில இலக்கிய படைப்பாளர்களாகிய சார்லஸ் டிகன்ஸ், ஆல்டுவஸ் ஹக்சிலி, ஜார்ஜ் பெர்னுட் ஷா, எஸ்.ஜி. வெல்ஸ் போன்ருேர் நூல்களை ஆழ்ந்து படித்தவர். அதே போல் லெபனுன் நாட்டுத் தத்துவ ஞானியும் எழுத்தாளருமாகிய கலில் ஜிப்ரான் நூல்களையும் மிகுந்த ஈடுபாடோடு படித்தவர். மராத்திய எழுத்தாளர் வி. ச. காண்டேகர், வங்காள எழுத்தாளர் தாகூர் போன்ருேர் நூல்களையும் மு.வ. ஆழ்ந்து படித்தவர். காண்டேகரோடு கடிதத் தொடர்பும் மு.வ. அவர்கட்கு உண்டு.

தாயுமானவர், இராமலிங்கர் போன்ருேரின் தத்துவப் பாடல்களில் மூழ்கித் திளைத்தவர் மு.வ. சுவாமி இராம தீர்த்தரின் In The Woods of God Realization என்னும் நூலை மு.வ. தம் வாழ்க்கையில் ஒரு முக்கிய கால கட்டத்தில் படித்திராவிட்டால் அவர் ஒரு நாத்திகராக மாறியிருக்கக் கூடும். அதே போல் அவர் வாழ்க்கையில் அவருடைய சிந்தனையைப் பெரிதும் கவர்ந்த வடமொழித் தத்துவ நூல்களில் முதலிடத்தைப் பெறுவது உபநிடதங்கள் ஆகும். இவ்வாறு மு. வ. விரும்பிப் படித்த இலக்கிய நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள், சமய, தத்துவ நூல்கள் ஆகிய பலவற்றையும் பட்டியல் போடலாம்.

இங்கு முக்கியமாக நினைவில் வைக்கத்தக்கது ஒன்றுண்டு. மேற் குறிப்பிட்ட ஆசிரியர்களின் நூல்களை ஆய்வு மாணவர் ஒரு முறையேனும் படித்திருந்தால்தான் மு. வ. வின் நூல்களைத் தெளிவாக ஆராய்ச்சி செய்ய இயலும். இல்லையெனில் கரைத்த மாவையே கரைத்துக் கொண்டிருக்கும் அவல நிலை ஆய்வேடு களில் பிரதிபலிக்கும். மு.வ.வை, சோமர்செட்மாம் அவர் களோடு ஒப்பிட்டுப் பேராசிரியர் வி. சச்சிதானந்தம் அவர்கள் Dr. M. Varadarajan and Somurset Maugham'' என்னும் தலைப் பில் ஓர் அருமையான கட்டுரையினை எழுதியுள்ளார். அந்தப் போக்கில் ஆய்வேடுகளில் உள்ள இயல்கள் அமைய வேண்டும்.

ஆய்வாளர் தாம் படித்தவைகளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மாடு வயிறு நிறையப் புல்லை மேய்ந்த பிறகு, மரத்து நிழலில் அமர்ந்து அசை போடுவதுபோல் படித்த கருத்துகளைப் பலமுறை ஆழ்ந்து சிந்தனை செய்து, அதனால் உருவாகும் கருத்து களைக் கொண்டதாக இயல்கள் அமைய வேண்டும். அவ்வாறு இல்லாமல் சங்கப் பாடல்களுக்கு விளக்கம் சொல்லும் பாணி யிலேயே பெரும்பான்மையான ஆய்வேடுகள் உருவாகின்றன. இந்த நிலை, நாவல்களை ஆராய்கின்ற ஆய்வேடுகளிலும் உள்ளது.

எடுத்துக்காட்டு :

''மு.வ. அவர்கள் 1946 முதல்1961 வரை பதினைந்து புதினங் களைப் படைத்துள்ளார்; இவற்றின் நோக்கிலும் போக்கிலும் காலப் போக்கில் சில நுணுக்கமான மற்றவர்கள் இடம் பெறுவதை அறிய முடிகிறது. செந்தாமரை (1946) கயமை (1956) வரை உள்ள புதினங்களில் கலப்பு மணம் சிறப்பாகப் பேசப்படுகிறது. அல்லி (1952), அகல் விளக்கு (1958), வாடாமலர் (1960), மண் குடிசை (1961) ஆகிய புதினங்களில் அது பற்றிய பேச்சு இல்லை.

''1952 இல் வெளிவந்த அல்லி முதல் அவர் புதினங்கள் அனைத்திலும் அறிவியற் கருத்துக்கள் மிகுதியாக இடம் பெறு கின்றன.

''செந்தாமரை முதல் பெற்ற மனம் (1951) வரை வந்த புதி னங்கள் சமுதாயம் ஒட்டு மொத்தமாக மாற வேண்டும் என்று வலி யுறுத்துகின்றன. 1952இல் வந்த அல்லியிலிருந்து தனி மனிதர் திருந்துவதற்கு முதன்மை அளிக்கப்படுகிறது எனலாம். 'அல்லி' கதையே ஒரு சான்று. 'உன் மேல் குற்றம் இல்லை. உன் மனத் தில் நல்லெண்ணம் இருக்கிறதே அது போதும். இப்படி எல்லார்க்

கும் நல்லெண்ணம் வந்து விட்டால் உலகம் மாறி விடும்'' என்கிறான் வெங்கடேசன் (கயமை)

''சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வு நீங்க வேண்டும் என்றால் பொதுவுடைமை வரவேண்டும் என்று மங்கையும்(கள்ளோ?காவியமோ?) செல்வநாயகமும் (மலர்விழி)கூறுகின்றனர். தங்கள் உழைப்பின் பயனைப் பணக்காரர்களுக்கு உரிமையாக்கி விட்டு வறுமையில் வாழும் ஏழைகள், வாழ்வு பெற வேண்டும் என்றால் புரட்சி வரவேண்டும் என்கிறாள் மங்கை. பிச்சைக் காரர்களுக்குப் பிச்சை அளிக்காமல், வறுமையில் வாடச் செய்வதின் மூலம் புரட்சி செய்ய அவர்களைத் தூண்டிவிட வேண்டும் என்கிறார் சிராளர் (பெற்றமனம்). ஆனால் 'கயமை'யில் வரும் வெங்கடேசன் (1956), ''உலகம் திருந்தும் போதுதான் திருந்தும். அது வரையில் நம் கடமையைச் செய்ய வேண்டும் என்று கடமையில் நம்பிக்கை கொள்கிறேன்'' என்கிறான். ''எல்லோரும் உலகத்தைத் திருத்த முயல்கிறார்கள். உள்ளத்தைத் திருத்த அவ்வளவு முயல்வதில்லை. செய்ய முடிந்ததைச் செய்யாமல் முடியாததற்காக உழைத்துச் சலிப்பும் வெறுப்பும் அடைகிறார்கள்'' என்கிறார் மெய்கண்டார் (மண் குடிசை, 1961). சமுதாயம் திருந்துவது பற்றிய மு.வ. வின் கொள்கையில் 1956 இல் ஏற்பட்ட இச்சிறிய மாற்றம் கடைசி வரை நீடித்திருப்பதாக அறிய முடிகிறது''.

ந. பிச்சமுத்து, டாக்டர் மு. வரதராசனார் புதினங்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம், பிஎச்.டி ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1978.

பாகம் II

அடிப்படை ஆதாரங்கள் பற்றிய குறிப்பு

ஆய்வுரைக்குப் பயன்பட்ட நூல்களையும், கடிதங்களையும், செய்தித்தாள்களையும், பேட்டி கண்டு சேகரித்த குறிப்புகளையும், ஆவணப் பத்திரங்களையும், இன்னும் இவை போன்ற பிற தகவல் களையும் தெளிவாக ஆய்வுரையில் குறிப்பிட வேண்டும். இத் தகவல்களைச் சேகரித்த முறையைப் பற்றிக் குறிப்பிடுவதும் நல்லது. ஆய்வுரைக்கு ஏற்ற செய்திகளைத் தொகுப்பதற்கு உதவியாக இருந்த நூலகங்களையும், ஆங்கே உதவியாக இருந்த அனுபவம் மிக்க நபர்களின் பெயர்களையும், ஆவணக் காப்பகங் களையும் பேட்டி கண்ட ஆசிரியர்களையும், பிற செய்திகளையும் தெளிவாக, ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்கு மிகாமல் மிகச் சுருக்கமாகவும், பிற ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையிலும் எழுத வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக, 'ஈ.வே. இராம சாமி நாய்க்கரின் அரசியல் வாழ்க்கையும், தமிழக அரசியலும், 1920—49'* என்னும் வரலாற்று ஆய்வுரையில் கொடுக்கப் பட்டுள்ள அடிப்படை ஆதாரங்கள் பற்றிய குறிப்பினைக்** காட்டலாம்.

A NOTE ON THE SOURCE MATERIAL

Anyone attempting a study of the political career of Ramasamy Naicker between 1920 and 1949, must necessarily do a great deal of spade work on his own, uncovering facts from widely different sources. There are very few published works on Naicker.

---

*ஈ.ச. விசுவநாதன், ஈ. வே. இராமசாமி நாய்க்கரின் அரசியல் வாழ்க்கையும், தமிழக அரசியலும் 1920—49, ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக் கழக டாக்டர் பட்ட ஆய்வுரை, 1973. ப-ள். 414—17.

**ஆங்கிலத்தில் இதனை A Note on Source Material (அடிப் படை ஆதாரங்களைப் பற்றிய குறிப்பு) என்று குறிப்பிடுவார்கள்.

Sami Chidambaranar's TAMILAR TALAIVAR, a lengthy biography of Naicker in Tamil, though eulogistic in character, throws some light on Naicker's political activities up to 1940. K. M. Balasubramaniam's short sketch of Naicker's life in English sharply delineates his personality both as a leader of the masses and as a man. T. S. Tiruvengadam's THE DRAVIDIAN MOVEMENT: A RETROSPECT, P. D. Devanandan's THE DRAVIDA KAZHAGAM: A REVOLT AGAINST BRAHMANISM and G. S. Seshadri's article 'The Dravida Kazhagam in Madras' published in the INDIAN AFFAIRS RECORD, Vol. III, No. 1, February 1957, give briefly a general picture of the movement and its social and political objectives. T. M. Parthasarathi's Tamil work, D.M.K. VARALARU gives an account of the Justice Party, the D. K. and the D. M. K. Works of a more journalistic nature, which appeared in recent years, such as Sagar Ahluwalia's ANNA: THE TEMPEST AND THE SEA and P. Spratt's D. M. K. IN POWER, also permit insights into Naickers political activities.

Very few serious studies evaluating the work of Naicker have appeared so far. Robert L. Hardgrave Jr's THE DRAVIDIAN MOVEMENT gives a glimpse of Naicker's work in Tamilnad. Eugene F. Irschick's POLITICS AND SOCIAL CONFLICT IN SOUTH INDIA: THE NONBRAHMAN MOVEMENT AND TAMIL SEPARATISM 1916-1929 deals briefly with some aspects of Naicker's political activities during the period 1920-29. This is an excellent and comprehensive work on Tamilnad Politics of those times. Apart from this no serious histrolical work either on the Self-Respect movement or the Dravida Kazhagam is available to students of modern South Indian history.

The documents available at the Government Record Office-Madras, the National Archives of India, and the Nehru Memorial Museum and Library at New Delhi were consulted. Enquiries to the last two repositories showed that in a number of cases very little, if any extra material relating to the thesis is available. The available reference matererial is incorparated in chapter II, section III; chapter III, section II; and chapter IV, section I. Likewise fresh material culled from the Madras Record Office files, the micro-film copies of the TNCC papers (kindly made available to me by Dr. J. H. Voigt), 1931 Census Reports and other published works as documents are included in chapter I, and chapter II, section II and III. Nearly half of chapter I and almost the entire section III of chapter II contain new material.

The Nehru Memorial Museum and Library do not have the proceedings of the TNCC. Nor are they available with the Tamilnad Congress Committee in Madras. The relevent material gleaned from the Indian Statutory Commission Report, Vol. VI has been incorporated in the appropriate places. Census Reports of 1931 and 1941 have been consulted. Some relevant material found in the 1931

Census has been included. It is in the 1931 Census one finds fairly complete caste tables provided. Owing to the India Government's preoccupation with the Second World War efforts, the 1941 Census contains very little useful information for the present study.

Proceedings of the Madras Legislative Assembly and Council-Annual reports of various departments of administration and Year books in the Madras Legislative Assembly Library provide helpful material.

In the absence of official party records and files researchers have to depend mainly on reports in the English daily newspapers such as the HINDU and the MADRAS MAIL as well as the Tamil daily SWADESAMITRAN. These reports are indispensable to a correct understanding of the politics of the period. Micro-film copies of the HINDU including the weekly editions, are available in the University of Western Austraia Library at Perth, Australia. Most of the files of the HINDU for this period and some volumes of the JUSTICE are available in the Madras University Library. The HINDU office in Madras has a good index for their old files which is valuble for research workers. Old files of the MAIL and SWADESAMITRAN are available for consultation in their respective offices in Madras. Naicker's Tamil weekly, KUDI ARASU, is an excellent source material. Likewise C. N. Annadurai's Tamil weekly, DRAVIDA NADU, can also be referred to with profit in assessing the political trends in the 1940's. Some of the volumes of KUDI ARASU and the English weekly, REVOLT, are available for reference with K. Veeramani, editor of the Dravida Kazhagam Tamil Daily, VIDHUTHALAI. KUDI ARASU volumes relating to the period 1925-39 have to be gathered from several sources at Thiruchirapalli, Madurai, Thirunelveli and other district centres. P. Sambasivam of Madras gave several volumes of DRAVIDA NADU and KUDI ARASU for consultation. Members of P. Balasubramaniam's family made available to the writer the back numbers of the English weekly-SUNDAY OBSERVER, and some letters and documents relating to the declining period of the Justice Party 1932-40.

Valuable papers bearing on the anti-Hindi movement are available for reference with R. Muthukumaraswamy of Madras. T. P-Vedachalam, the former vice president of the Dravida Kazhagam placed at the disposal of the writer important personal papers, besides correspondence relating to the anti-Hindi movement and certain old files concerning Kazhagam activities. S. Ramanathan gave a copy of his book GANDHI AND THE YOUTH for making a photo-stat copy K. M. Balasubramaniam gave a copy of each one of his published works regarding the South Indian political figures of the first half of this century.

In addition to these materials, the pieces of information collected throgh confidential interviews have been specially helpful in presenting a fairly authentic picture of Naicker's political activities during the period under review.

அடிக்குறிப்புகளும் - நூலட்டவணையும்

அடிக்குறிப்புகளையும், நூலட்டவணைகளையும் பற்றி மிகச் சிறந்த ஆசிரியர்களும் பல சமயங்களில் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. இந்த இரண்டினையும் முறையாகவும், சில வரையறைக்கு உட்பட்டும் செய்யவேண்டும். இல்லாவிட்டால் காலம் விரயமாகும். காலத்தின் அருமை கருதியும்; சோம்பலின் காரணமாகவும் சில ஆசிரியர்கள் (சில புகழ் பெற்ற பேராசிரியர் கள் கூட) அடிக் குறிப்புகளிலும் நூலட்டவணையிலும் கருத்து செலுத்துவதில்லை; ஆனால் ஆய்வாளர் இவைகளைப் புறக்கணிக்கக் கூடாது. ஆய்வுக் கட்டுரைக்கும் உள்ள இன்றியமையாத வேறுபாடு அடிக்குறிப்புகள் தருவதாலேயே ஏற்படுகிறது. ஆய்வுக் கட்டுரையில் கூறப்படும் கருத்துகளுக்கும் முடிபுகளுக்கும் அடிக்குறிப்பே ஓர் அரணாக அமைந்து அக்கட்டுரைக்கு ஓர் அழுத்தத்தையும், நிறைவையும் கொடுக்கின்றது. அடிக்குறிப் பில்லாமல் ஆய்வுக் கட்டுரையினை எழுதினால், அதில் உள்ள கருத்துக்களை ஆசிரியர் தன்முனைப்பாக வெளியிடும் கருத்துக்கள் என்றும், சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு செய்யும் உய்த்துணர்வு என்றும் அறிஞர்கள் கருதுவார்கள்.

ஆய்வுரையில் அடிக்குறிப்பும், நூலட்டவணையும் அமைய வேண்டிய முறைக்குச் சில பொது விதிகள் உள்ளன. இந்நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருப்பவை பல ஆசிரியர்களால் எடுத்தாளப்பட்டுப் பழகிய முறையாகும். இவைகளை முறை அறிந்து கையாள்வதால் ஆய்வுரையின் தரம் உயர்கின்றது.

ஆய்வுரையில் எடுத்தாளப்படும் ஒவ்வொரு நூலையும் கோடிட்டுக் காட்ட வேண்டும். நூல் அச்சாகும்போது நூல் களின் பெயர்களை வேறுபட்ட அச்சில் தருவார்கள். ஆய்வுரை யினைத் தட்டெழுத்தில் படி எடுக்கும்போது இது இயலாது. ஆதலால் கோடிட்டு, இவை நூல்கள் என இனம் பிரித்துக் காட்டவேண்டும்.

ஆதாரங்களை எடுத்துக்காட்டல்

நூல்கள் : ஒரு நூலை முதன் முதலில் ஆய்வுரையில் எடுத்துக் காட்டும்போது, அந்நூலைப் பற்றிக் கீழ்க்காணும் விபரங்கள் அடிக்குறிப்பில் இடம்பெற வேண்டும்.

(i) நூலாசிரியர் பெயர்

(ii) நூலின் முழுத் தலைப்பு

(iii) நூல் வெளியிடப்பட்ட இடம். (நூல் *அச்சான* இடம் அன்று; சில சமயங்களில் நூல் ஓர் ஊரில் அச்சாகும்; வெளியிடு வோர் வேறோர் ஊரில் இருப்பர்)

(iv) நூல் வெளியான ஆண்டு

(v) மேற்கோள் எடுத்தாண்ட பக்கத்தின் எண்

முதன் முதலில் அடிக்குறிப்பில் கையாளும்போது பின்பற்ற வேண்டிய பொதுவிதி

எடுத்துக்காட்டு

மு. வரதராசன், **குறட்டை ஒலி.** (சென்னை, *1956*), ப. *45.*

மற்றொருவகை எடுத்துக்காட்டு

திருவாரூர் வி. *கலியாணசுந்தர* முதலியார், **பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கை விளக்கம்** (சென்னை, சாது அச்சுக் கூடம், *1949*), ப. *120.*

இதில் நூல் வெளியான இடத்தின் பெயரோடு, நூல் அச்சிட்ட அச்சுக்கூடத்தின் பெயரும் உள்ளது. அச்சுக்கூடத்தின் பெயர் நூல் வெளியான ஊருக்கும், ஆண்டுக்கும் நடுவில் இடம்பெற வேண்டும்.

மறுமுறை அதே நூலைக் கையாளும்போது

ஆசிரியரின் பெயரும், நூலின் பெயரும் நீண்டிருந்தால் அவை களைச் சுருக்கலாம். நூல் வெளியான இடம், அச்சுக் கூடத்தின் பெயர், ஆண்டு இவைகளையும் நீக்கலாம். ஒரு முறை குறிப்பிட்ட ஆசிரியரின் பிற நூல்களை எடுத்துக் காட்டும்போதும் ஆசிரியரின் பெயரைச் சுருக்கித் தரலாம்.

எடுத்துக்காட்டு

திரு.வி.க., **பெண்ணின் பெருமை**, ப. *130.*

திரு.வி.க., **உள்ளொளி**, மூன்றும் பதிப்பு (சென்னை, *1953*), ப—ள். *78—80.*

பிற விதிகள்

சில நூல்கள் பல பாகங்களாக அமைவதுண்டு. அப்போது பின்பற்ற வேண்டிய விதிகள் பின்வருமாறு:-

1. முதன் முதலில் கையாளும்போது

திரு.வி.க., திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், (இரு தொகுதிகள், சென்னை, 1969), முதற் தொகுதி, ப. 63.

2. பிறகு

திரு.வி.க., வாழ்க்கைக் குறிப்புகள், தொகுதி 1, ப. 75.

3. இரண்டாம் பதிப்பும் அடுத்த பிற பதிப்புகளும்

திரு.வி.க., தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு, ஆறும் பதிப்பு (சென்னை, 1957), ப. 285.

4. பதிப்பு நூல்

உ. வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்), குறுந்தொகை மூலமும் உரையும், மூன்றும் பதிப்பு, (சென்னை, 1955), ப. 150.

இரண்டு மூன்று ஆசிரியர்கள் சேர்ந்து எழுதிய நூல்கள்

5. இரண்டு மூன்று ஆசிரியர்கள் சேர்ந்து எழுதிய நூலாக இருந்தால், தலைப்புப் பக்கத்தில் நூலாசிரியர்கள் பெயர் எந்த வரிசையில் உள்ளதோ அந்த வரிசையிலேயே அடிக்குறிப்பில் அமைய வேண்டும். இவை அகர வரிசையில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி தலைப்புப் பக்கத்தில் உள்ள முறையையே அடிக்குறிப்பில் பின்பற்ற வேண்டும்.

எடுத்துக்காட்டு

ம. ரா. போ. குருசாமி, சுப. அண்ணாமலை, கதிர் மகாதேவன் (மொழிபெயர்ப்பாளர்), பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (சென்னை, 1964), ப. 180.

6. பல ஆசிரியர்கள் சேர்ந்து உருவாக்கிய நூலில் பதிப்பாசிரியர் பெயர் குறிப்பிடப் படாமல் இருந்தால் பின்பற்ற வேண்டிய முறை:

எடுத்துக்காட்டு

ப. அருணசலமும், பிறரும், தெ. பொ. மீ. மணி விழா மலர் (கோவை, 1961), ப. 200.

பதிப்பு நூலில் உள்ள கட்டுரையினை மேற்கோள் காட்டும் போது பின்பற்ற வேண்டிய விதி:

எடுத்துக்காட்டு

அ. ச. ஞானசம்பந்தம், 'காலப்போக்கில் தமிழ் இலக்கியம்: இருபதாம் நூற்றுண்டு', தெ. பொ. மீ. மணிவிழா மலர் (கோவை, 1961), ப-ள், 296-297.

இங்குக் கட்டுரை வளைவுக் குறிக்குள் உள்ளது. நூலின் பெயர் மாறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. இந்த முறையைத் தெளிவாக நினைவில் கொள்ள வேண்டும்.

கலைக்களஞ்சியம் போன்ற ஆதார நூல்களில் ஆசிரியர் பெயர் குறிப்பிட்ட கட்டுரையினை மேற்கோள் காட்டும்போது கடைப் பிடிக்க வேண்டிய முறை :

எடுத்துக்காட்டு

டி. என். ராமச்சந்திரன், 'எல்லோரா', **கலைக்களஞ்சியம்,** இரண்டாம் தொகுதி (சென்னை, 1955), ப. 554.

ஆசிரியர் பெயர் குறிப்பிடாத கட்டுரையினை மேற்கோள் காட்டும் போது பின்பற்ற வேண்டிய முறை:

எடுத்துக்காட்டு

கட்டுரை, 'பிரார்த்தனை', **கலைக்களஞ்சியம்,** ஏழாம் தொகுதி (சென்னை, 1960), ப-ள், 313-14.

பல கட்டுரைகள் அடங்கிய நூலில் உள்ள ஒரு கட்டுரையினை மேற்கோள் காட்டும்போது, அடிக்குறிப்பில் அந்தக் கட்டுரையினை வளைவு அடைப்புக்குறியில் காட்ட வேண்டும். நூலின் பெயரைக் கோடிட்டு வேறுபடுத்திக் காட்ட வேண்டும். இந்தப் பொது விதியினை மறந்து கட்டுரையினைக் கோடிட்டுக் காட்டினால் படிப்பவர் அதனை ஒரு நூலாகக் கருதி விடுவர்.

குறியீடுகளை அமைப்பதில் ஆங்கிலேயர்களுக்கும், அமெரிக்கர்களுக்கும் வேறுபாடு உண்டு. இதில் நாம் எந்த முறையை வேண்டுமானாலும் பின்பற்றலாம். ஆனால் ஒரே நூலில் இரண்டு முறைகளையும் கலந்து கையாளக் கூடாது. ஏதேனும் ஒரு முறையினை நூல் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆங்கில முறை

1. தி. முருகரத்தனம், **குறள் கூறும் இறை மாட்சி** (மதுரை, 1974), ப. 53.

2. நா. பார்த்தசாரதி, **சமுதாய வீதி** (சென்னை, 1968), ப. 137.

அமெரிக்க முறை

1. சி. பாலசுப்பிரமணியம். **தமிழ் இலக்கிய வரலாறு.** ஆரும்பதிப்பு. சென்னை, 1967, ப.35.

2. இரா. தண்டாயுதம். **தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்.** சென்னை, 1972. ப.75.

ஆண்டு, அரையாண்டு, முத்திங்கள், திங்கள், வாரவெளியீடுகள் ஆகியவைகளை அடிக் குறிப்பில் காட்டும்போது கவனிக்க வேண்டிய விதிகள்:

ஆண்டு வெளியிடுகளும் பிறவும் பல தொகுதிகளாக வெளி வரும். இதனை முதற் தொகுதி, இரண்டாம் தொகுதி என ரோமன் எண்ணிட்டுக் குறிப்பர். இத்தகைய பகுதிகள் பெரும் பாலும் காலண்டர் ஆண்டுகளோடு (calender year) ஒத்து வருவ தில்லை. மேற்கூறிய வெளியிடுகளில் வெளிவந்த கட்டுரைகளை மேற்கோள் காட்டினால் பின்வரும் செய்திகள் அடிக்குறிப்பில் இடம் பெற வேண்டும்.

1. கட்டுரை ஆசிரியரின் பெயர்

2. கட்டுரையின் தலைப்பு (வளைவுக் குறியிட்டுள் இருக்க வேண்டும்)

3. வெளியிட்டின் பெயர் (சஞ்சிகையின் பெயர்) இதனடியில் கோடிடல் வேண்டும்

4. சஞ்சிகையின் தொகுதி எண்

5. ஆண்டு (வட்ட வளைவிற்குள் இருக்க வேண்டும்)

6. பக்க எண் (ஒரு கட்டுரை முழுவதையுமே குறித்தால், கட்டுரையின் தொடக்க எண்ணினையும் முடிவு எண்ணினையும் குறிப்பிட்டு இரண்டும் உட்பட என எழுத வேண்டும்)

எடுத்துக்காட்டு

1. மா. இராசமாணிக்கம், 'கண்ணகி', **செந்தமிழ்ச் செல்வி,** தொகுதி XVI (சென்னை, 1937-38), பக். 217-23.

2. ந. மு. வேங்கடசாமி நாட்டார், 'சாத்தனுர் பாத்திறல்', **செந்தமிழ்ச் செல்வி,** தொகுதி VI (சென்னை, 1928-29), பக். 734-36.

தொகுதிகளின் எண்களைப் பெரும்பாலும் ரோமன் எண்களில் கொடுப்பதுதான் வழக்கம். சிற்சில சமயங்களில் தொகுதி எண்களை அரேபிய எண்களில் தருவதும் உண்டு. வெளியீடுகள் எந்த வகை எண்ணினைப் பயன்படுத்துகின்றனவோ அதையே தான் அடிக்குறிப்பிலும் தரவேண்டும்.

எடுத்துக்காட்டு

1. ப. அருணாசலம், 'புறநானூற்றுப் பாடல்களில் அகம்', **புலமை,** தொகுதி 1, பகுதி, 3 (சென்னை, ஜூலை-செப்டம்பர் 1975), பக் 82-94.

பல்வேறு காரணங்களினால் சஞ்சிகைகள் முறையாக வழங்கி வரும் தொகுதி எண்களைக் கைவிட்டுவிட்டுப் புதிய தொடர் ஒன்றனை ஆரம்பித்து வைப்பதும் உண்டு. அடிக்குறிப்பில் இந்த மாற்றங்களை எல்லாம் தெளிவு படுத்த வேண்டும்.

செய்தித்தாள்களும் வார இதழ்களும்

சில செய்தித் தாள்களும், வார இதழ்களும் தம் ஏடுகளுக்குத் தொகுதி எண்ணிட்டு வெளியிடுவதுண்டு. ஆனால் இவைகளிலிருந்து மேற்கோள் காட்டும் போது அடிக்குறிப்பில் தொகுதி எண்ணினைக் குறிப்பிடக் கூடாது. வெறும் தேதியை மட்டும் குறிப்பிட வேண்டும்.

எடுத்துக்காட்டு

நவசக்தி, 20 டிசம்பர் 1929

சுதேசமித்திரன், 16 மே 1950.

தேதியைக் குறிப்பிடும் போது—
செப்டம்பர் 16ம் தேதி, 1957. என்றோ
4/ 6/ 1964. என்றோ

1/3/'67.—என்றே எழுதக் கூடாது. தேதியை அடிக் குறிப்பிலும், ஆய்வுரையிலும் எழுதுவதில் ஆங்கிலேயர்களுக்கும், அமெரிக்கர்களுக்கும் வேறுபாடு உண்டு.

எடுத்துக்காட்டு

ஆங்கில முறை:—

தமிழ்நேசன், 18 ஏப்ரல் 1959.

அமெரிக்க முறை:—

தமிழ் முரசு, மார்ச் 1, 1967.

ஆனல் ஆய்வுரையில் எடுத்தாளப்பட்ட கட்டுரையில் செப்டம்பர் 16, 1965 எனத் தேதி குறித்திருந்தால் அதில் எத்தகைய மாறுதலையும் செய்யக் கூடாது.

அடிக்குறிப்பில் கையெழுத்துப் பிரதிகளையும், கடிதங்களையும் குறிப்பிடும் போது கவனிக்க வேண்டிய விதிகள்:

கையெழுத்துப் பிரதிகள், நாட்குறிப்பு ஏடுகள், கடிதங்கள் இவைகளில் காணப்படும் தகவல்களை ஆய்வுரைக்குப் பயன் படுத்தும் வழக்கம் உண்டு. இவைகள் யாரிடம் வேண்டு மானலும் இருக்கலாம். சிறந்த இலக்கிய ஆசிரியர்கள் முதல் நாட்டுத் தலைவர் ஈறாக உள்ள யாவரிடமும் இருக்கலாம். பாண்டிச்சேரியில் துபாஷாக அலுவல் பார்த்த ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பேடு, இன்று வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருப்பதை யாவரும் அறிவர்.

தமிழக அரசியல் தலைவர்களின் கடிதங்கள், நாட்குறிப் பேடுகள், அவர்கள் சேர்த்து வைத்த பத்திரிகைக் குறிப்புகள் யாவற்றையும் புது டெல்லியில் உள்ள நேரு நூலகம் சேகரித்து வைத்துள்ளது. பி. கேசவ பிள்ளை, எஸ். சீனிவாச ஐயங்கார், வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், ஆர். கே. சண்முகம் செட்டியார் போன்ற அரசியல் தலைவர்களின் கடிதங்கள் (கேசவ பிள்ளை, பிற தலைவர்களுக்கு எழுதிய கடிதங்களும், பிறர் அவருக்கு எழுதிய கடிதங்களும் இதில் அடங்கும்) குறிப்பேடுகள், செய்தித்தாள் துணுக்குகள் (paper clippings) ஆகியவற்றை இங்கு காணலாம். இவைகளைத் தேதி, மாதம், ஆண்டு வரிசையில் முறைப்படுத்திக் கேசவ பிள்ளை தொகுதி, எஸ். சத்தியமூர்த்தி தொகுதி எனத்

தனித்தனியாகப் பிரித்து வைத்துள்ளார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் பல பைல்கள் இருக்கும். ஒவ்வொரு பைலிலும் என்னென்ன தகவல்கள் அடங்கியுள்ளன என்பதற்கான அட்டவணையும் தயாரித்து வைத்துள்ளார்கள். இவைகளில் உள்ள செய்திகளை ஆய்வுரையில் கையாளும்போது பின்வரும் வகையில் அடிக்குறிப்பினை எழுதவேண்டும்.

பி. கேசவபிள்ளை கடிதங்கள்: பிள்ளை சென்னை ஆளுநர்க்கு எழுதிய கடிதம் (குத்தி, 1—3—1918) புது டெல்லி, நேரு ஆவணக் காப்பகம், பைல் எண். 3. ப. 75.

கடிதங்களைப் பற்றி அடிக்குறிப்பில் தகவல் தரும்போது, யார் யாருக்கு எழுதியது என்பதோடு, தேதியையும் குறிப்பிட வேண்டும். இத்தகவல்கள் சிற்சில கடிதங்களின் வாயிலாகப் புலப்படாமற் போகலாம். அப்போது, அக்கடிதம் எங்கிருந்து வந்தது என்பதை அறிந்து சில தகவலை ஊகித்து அறியலாம். மேற்கோளாக ஒரு கடிதத்தில் "சட்டத் துறை", "சென்னைத் தலைமைச் செயலகம்" என்றிருந்தால், அக்கடிதத்தை எழுதியவர் ஓர் முக்கிய அரசாங்க அதிகாரியாக இருந்திருப்பார் என்று ஊகிக்கலாம். இத்தகைய ஊகங்களையும் அடிக்குறிப்பில் தெளிவாக்க வேண்டும்.

பேட்டி கண்டு பெறும் கருத்துக்கள்

பேட்டி கண்டு பெறும் கருத்துக்களை ஆய்வுக் கட்டுரையில் பயன்படுத்தினால், அதற்கும் தெளிவாக அடிக்குறிப்பை எழுத வேண்டும். எழுத வேண்டிய முறை பின் வருமாறு.

1. பேட்டி கொடுக்கும் நபரின் பெயர்
2. பேட்டி கண்ட இடம்
3. பேட்டி கண்ட தேதி

எடுத்துக்காட்டு :

1. மு. வரதராசன், சென்னை, 18.9.1962
2. ஏ. எல். பேஷம், கான்பரா, 20-5-1968.

சிற்சில சமயங்களில் பேட்டி கொடுப்பவர் தம் பெயரை ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதுண்டு. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவர்

வெளியிட்ட கருத்து, பரவலாகச் சமுதாயத்தில் உள்ள கருத்திற்கு மாறுபட்டதாகவோ யாரும் நம்ப இயலாததாகவோ இருப்பினும் உண்மையானதாக இருக்கலாம். கசப்பான உண்மைகளை வெளியிட்டுச் சமுதாயத்தில் பொல்லாப்புத் தேடிக் கொள்ள வேண்டாம் என்பதற்காகத் தம் பெயரைக் குறிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டால், அதற்கிணங்க அடிக்குறிப்பில் பின் வருமாறு எழுத வேண்டும்:

பேட்டி கொடுத்தவர் பெயரை வெளியிடுவதற்கில்லை,
சென்னை, 19-7-1965.

இதோடு ஆய்வாளர் மற்றொரு முக்கிய கருத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். பேட்டி கொடுத்தவர் பெயரைக் கட்டுரையில் குறிப்பிடாமல் விடுவதோடு, நெருங்கிய நண்பர்களிடமும் எக்காரணம் கொண்டும் அவர் பெயரைக் கூறக்கூடாது. இது ஆய்வாளருக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பாடுகளில் ஒன்றுதும்.

அடிக்குறிப்பு அமைய வேண்டிய இடம்

ஆய்வுரையில் எந்தப் பக்கத்தில் மேற்கோள் அல்லது பிறர் கருத்துக்கள் எடுத்தாளப்படுகின்றதோ, அந்தப் பக்கத்தின் கீழேயே அதற்கான அடிக்குறிப்பும் அமைய வேண்டும். தற்போது, ஆய்வுரையில் கூட அடிக்குறிப்புகளை ஒவ்வோர் இயலின் (chapter) இறுதியில் இணைக்கிறார்கள். அடிக்குறிப்புகளை அந்தந்தப் பக்கத்தின் கீழ் அமைப்பதில் சிறந்த தட்டெழுத்தருக்கும் இடர்பாடு ஏற்படுவதுண்டு. அவ்வாறு அமைப்பதில் சிரமமும், கால விரயமும், உழைப்பும் அதிகம்தான். இருப்பினும் படிப்போர், குறிப்பாக ஆய்வுரைகளைத் தேர்வு செய்வோர், அந்தந்தப் பக்கத்திலேயே அடிக்குறிப்பு அமைவதை விரும்புகின்றனர். இது குறித்துப் பேராசிரியர் ல நாஸ்,

*'It is firmly recommended that references and footnotes in theses be placed at the foot of the appropriate page of the text... The neat placing of footnotes below a typed text is often a matter of some difficulty even to an experienced typist, but the running-on of a footnote to the foot of the next page of text is to be preferred to the placing of notes at the end of the text'.

---

* J. A. La Nauze, PRESENTATION OF HISTORICAL THESES: NOTES FOR UNIVERSITY STUDENTS (Melbourne, 1966), p. 13

அடிக்குறிப்பிற்கு எண்ணிடும் முறை

ஒவ்வொரு பக்கத்திற்கும் தனித்தனியாகத் தொடர் எண்ணிடும் முறையும், ஓர் இயல் முழுவதற்குமே தொடர்ந்து எண்ணிடும் முறையும் வழக்கத்தில் உள்ளன. ஒவ்வொரு பக்கத்திற்கும் தனித்தனியே எண்ணிடும் முறையில் சில தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஏனெனில், பல பக்கங்கள் கொண்ட கையெழுத்துப் பிரதியில் அடங்கிய செய்திகளைத் தட்டெழுத்தில்சில பக்கங்களிலேயே அடக்கலாம். இதனால் கையெழுத்தில் கொடுத்த அடிக்குறிப்பு எண், தட்டெழுத்துப் பிரதியில் மாறும். அப்போது சில தவறு ஏற்பட வாய்ப்புண்டு. இத்தவறு ஏற்படாமல் காக்க ஓர் இயல் முழுவதற்கும் தொடர் எண் கொடுப்பதே சிறந்த முறையாகும்.

ஆய்வுரையினை எழுதும்போதே, அடிக்குறிப்பிற்கான தொடர் எண் குறிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும். அதோடு வளைவு அடைப்புக்குறி இட்டு, அதில் அடிக்குறிப்பில் சேர்க்க வேண்டிய தகவல்கள் யாவற்றையும் தெளிவாக எழுதி விடலாம். இதனால் இரண்டு நன்மைகள் உண்டு.

1. குறிப்பிட்ட ஒரு பக்கத்தில், அடிக்குறிப்பிற்காக எவ்வளவு இடம் ஒதுக்க வேண்டும் என்பதைத் தட்டெழுத்தர் முன் கூட்டியே அறிய வாய்ப்பேற்படுகிறது.

2. ஆய்வாளர்க்குத் திரும்பத் திரும்ப மூல ஆதாரங்களைப் (source) பார்த்து அடிக்குறிப்பு எழுத வேண்டிய தொல்லை இராது.

இது தவிர, வேறொரு வழியும் உண்டு. அடிக்குறிப்பிற்காகத் தொடர் எண் இட்ட இடத்திலேயே வளைவு அடைப்புக்குறி போட்டு, அடிக்குறிப்பில் அடங்கவேண்டிய விபரங்களை எழுதுவதற்குப் பதிலாகத் தனித் தாளில் ஒவ்வோர் இயலுக்கும் உரிய அடிக்குறிப்புகளை வரிசைக் கிரமமாக எழுதி வரலாம். இந்த முறையைப் பின்பற்றினால், அடிக்குறிப்பைத் திரும்பத் திரும்ப எழுத வேண்டியிருக்காது.

பொதுவாக, ஓர் இயலை ஒரு முறை உட்கார்ந்து எழுதி முடிக்க இயலாது. அப்படி எழுதினாலும், அதனைப் பலமுறை திருத்திய பிறகே, தட்டெழுத்தாளரிடம் கொடுக்க இயலும். தட்டெழுத்துப் பிரதியாக வந்த பிறகும் கூட பல திருத்தங்களைச் செய்ய வேண்டிவரும். சிற்சில சமயங்களில் ஓர் இயல் முழுவதையுமே திரும்ப எழுத வேண்டி வரும். இதனால் அடிக்குறிப்புகளையும் திரும்பத் திரும்ப எழுத வேண்டிவரும். ஒன்றையே

பல முறை திரும்பத் திரும்ப எழுதும்போது கவனக் குறைவால் சில தவறுகள் ஏற்பட வாய்ப்பும் உண்டு. அதோடு உழைப்பும், காலமும் விரயமாகும். இதைத் தவிர்க்க அடிக்குறிப்புத் தகவல்களை தனித்தாளில் குறிக்கும் முறையே சிறந்ததாகும். இந்த முறையிலும் ஒரு சிறிய குறை உண்டு. கவனக் குறைவின் காரணமாகத் தனித் தாள்கள் தொலைவதற்கும் வழி உண்டு. இதனைத் தடுக்க அடிக்குறிப்பிற்கென ஒரு தனி பைல் வைத்துக் கொண்டு அதில் ஒவ்வொரு இயலுக்கும் உரிய அடிக்குறிப்புகளை இணைத்து வரவேண்டும். தனித்தாள் தொலைய வாய்ப்புண்டு; ஒரு பைல் முழுவதுமே தொலைவது அரிது.

பதிப்பாளரின் பெயர்

சில அறிஞர்கள் பதிப்பாளரின் பெயரும் அடிக்குறிப்பில் இருக்க வேண்டும் என்பர். மற்றும் சில அறிஞர்கள் இம்முறை பயனுடையதானாலும், அடிக்குறிப்பில் அமைய வேண்டிய அவசியம் இல்லை என்பர். ஒரு நூலையே பல பதிப்பாளர் வெளியிட்டிருப்பின், ஆய்வாளர் பயன்படுத்திய நூலின் பதிப்பாளரின் பெயரை அடிக்குறிப்பில் காட்டலாம் எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். இத்தகைய விரிவான செய்திகளை நூலட்டவணையில் காட்டுவதே சிறப்புடையது.

நூலட்டவணையில் இடம் பெற வேண்டியவை

ஆய்வுக்குப் பெரிதும் பயன்பட்ட நூல்களையும், ஆவணப் பத்திரங்களையும், அரசாங்க அறிக்கைகளையும், ஆய்வுரைகளையும், கடிதங்களையும் இனம் பிரித்து நூலட்டவணையில் காட்ட வேண்டும். இதனை 'Select Bibliography' என ஆங்கிலத்தில் குறிப்பர்.

ஆய்வுக்குத் துணைபுரியும் என்று எண்ணிப் படித்த நூல்களை எல்லாம் நூலட்டவணையில் சேர்க்கக் கூடாது. இது போலவே ஓரிரு கருத்துக்களை விளக்குவதற்குப் பயன் பட்ட நூல்களையும் நூலட்டவணையில் இணைக்கக் கூடாது.

நூலட்டவணையின் அமைப்பு

ஒருவர் மேற்கொள்ளும் ஆய்விற்கேற்பவும், அவர் பயன்படுத்தும் ஆதாரங்களை ஒட்டியும் நூலட்டவணையின் அமைப்பு மாறும். தமிழிலக்கியங்களை (அல்லது பிற இலக்கியங்களை) ஆராய்கின்றவர்கள் பெரும்பாலும் மூல நூல்களையும், உரைவளங்களையும், திறனாய்வு நூல்களையும், கட்டுரைகளையுமே அதிகமாகத்

தம் ஆய்வுக்குப் பயன்படுத்துவர். வரலாற்றுத்துறை—குறிப்பாக அரசியல் வரலாற்றுத்துறை—ஆய்வாளர்கள் அன்று வரை வெளியான நூல்கள், கட்டுரைகளோடு, ஆவணப் பத்திரங்கள், அரசாங்க அறிக்கைகள், மக்கள் கணக்கெடுப்பு அறிக்கைகள் போன்ற பலதரப்பட்ட ஆதாரங்களைத் தேடித் தம் ஆய்விற்குப் பயன்படுத்துவர். இதற்கேற்ப நூலட்டவணையின் அமைப்பும் மாறுபடும். பொதுவாக, படித்த ஆதாரங்களின் மிகுதி நோக்கி நூல்கள், கட்டுரைகள், ஆய்வுரைகள் எனப் பல உட்பிரிவுகள் தந்து நூலட்டவணையை உருவாக்கலாம். கீழ்காணும் அமைப்பு முறையைப் பின்பற்றி நூலட்டவணையை அமைக்கலாம்.

1. கையேடுகள் : இவை பற்றிய பொது விவரம்; கிடைத்த இடம் அல்லது உள்ள இடம்; பிற பயனுடைய குறிப்புகள்; இவைகளில் அடங்கிய செய்திகளின் சாரம் போன்றவை இடம் பெற வேண்டும்.

2. பாராளுமன்ற, மாநிலச் சட்டமன்ற அறிக்கைகள் ; இங்கு நடந்த விவாதங்கள்; அவை வெளியிட்ட அறிக்கைகள், புள்ளிவிவரத் தொகுப்பு (statistics) போன்றவை இதில் அடங்கும்.

3. செய்தித் தாள்கள், சஞ்சிகைகள்: அவை பிரசுரம் ஆகும் இடமும், எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை அந்தச் சஞ்சிகைகள் பயன்படுத்தப்பட்டன என்னும் தகவலும் கொடுக்க வேண்டும். சிற்சில ஆண்டுகளில் சில பத்திரிகைகள் பிரசுரம் ஆகாமலும் இருந்திருக்கலாம். இத்தகவலையும் இங்கு தெளிவாகக் குறிப்பிட வேண்டும்

4. ஆய்வுரைகள் : ஆராய்ச்சி செய்யும் கால கட்டத்தைப் பற்றிப் பிறர் எழுதிய ஆய்வுரைகளை இதில் சேர்க்கவேண்டும்.

5. கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள், நாட் குறிப்பேடுகள் ஆகியவைகளுக்குத் தனித் தலைப்பு தந்து இங்கு இணைக்கலாம்.

6. கட்டுரைகள்: ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளியான கட்டுரைகள், ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்திருக்கும் தலைப்புக்குத் தொடர்பான கட்டுரைகள் இங்கு இடம் பெறவேண்டும்.

7. நூல்கள்: ஆய்விற்கு நேரடித் தொடர்புடைய நூல்கள், சில முக்கிய நிகழ்ச்சிகளை விளக்கப் பயன்பட்ட நூல்கள், ஆய்வு செய்யும் கால கட்டத்தை அறியப் பயன்பட்ட நூல்கள் ஆகியவைகளை இங்குப் பட்டியல் இட்டுக் காட்ட வேண்டும். ஆய்வு செய்யும் பொருள் பற்றி எழுந்த பொதுப்படையான நூல்கள்

நேரடித் தொடர்பில்லாத நூல்கள், ஆய்வு செய்யும் காலப் பொது நிலவரத்தை அறியப் பயன்பட்ட நூல்கள் இதில் பொதுவாக இடம் பெறக்கூடாது. தேர்ந்தெடுத்த நூலட்டவணையில் (Select Bibliography) எவை இடம் பெறலாம் என்பதை நிர்ணயிக்கும் உரிமை ஆய்வாளரைப் பொறுத்தது.

ஆய்வுரையை ஆங்கிலத்தில் எழுதினுல், ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திய ஆங்கில நூல்களுக்கு ஒரு பட்டியலும், பிறமொழி நூல்களுக்கு—தமிழ், மலையாளம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற நூல்களுக்கு—ஒரு தனிப்பட்டியலும் போடவேண்டும்.

இலக்கியத் தொடர்பான ஆய்வுரைகளை எழுதுபவர்கள் இதிலும் சில உட்பிரிவுகளைத் தரலாம். ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்போது அந்த எழுத்தாளர் எழுதிய நூல்களை முதலில் பட்டியல் இட வேண்டும். பிறகு அந்த எழுத்தாளரைப் பற்றி எழுந்த இலக்கியத் திறனுய்வு நூல்களைப் பட்டியல் போடவேண்டும்.

பொதுவாக நூலட்டவணையைத் தயாரிக்கும்போது ஒவ்வொரு உட்பிரிவில் சேர்க்கும் நூல்களையும், கட்டுரைகளையும் பிறவற்றையும் அகர வரிசையில் தரவேண்டும்.

எடுத்துக்காட்டு

தமிழ் நூல்கள்

1. அகத்தியலிங்கம், ச., **உலக மொழிகள்: இந்திய-ஐரோப்பிய மொழிகள்**, முதற் பகுதி, சென்னை, 1968.

2. அண்ணுதுரை, சி. என்., **பார்வதி பி. ஏ.**, இரண்டாம் பதிப்பு, சென்னை, 1953.

3. இராகவய்யங்கார், மு., **சேரன்செங்குட்டுவன்**, ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1964.

4. இராகவையங்கார், ரா., **தமிழ் வரலாறு**, அண்ணமலை நகர், 1941

சில நூல்கள் பலர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இருக்கும். இவைகளில் தொகுப்பாசிரியர் பெயரே குறிப்பிடப் பட்டிருக்கும். இத்தகைய நூல்களை அட்டவணையில் சேர்க்கும் போது பெயருக்குப் பின் வளைவு அடைப்புக் குறியில் பதிப்பாசிரியர் எனக் குறிக்கவேண்டும்.

எடுத்துக்காட்டு

சஞ்சீவி, ந. (பதிப்பாசிரியர்), **இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்**, சென்னை, 1974.

ஒரு நூல் மொழிபெயர்ப்பாக இருந்தால், மொழிபெயர்த்த ஆசிரியரின் பெயருக்குப் பக்கத்தில் வளைவு அடைப்புக்குறியில் மொழிபெயர்ப்பாளர் என்பதனைக் குறிக்கவேண்டும்.

எடுத்துக்காட்டு

ரதுலன் (மொழிபெயர்ப்பாளர்), **புஷ்கின் கதைகள்**, சென்னை, 1958

அடிக்குறிப்பில் நூல் வெளியான இடத்தையும், ஆண்டையும் வளைவு அடைப்புக் குறியிட்டுக் காட்டுவது வழக்கம். நூல் அட்டவணையில் வளைவு அடைப்புக் குறியை நீக்கவேண்டும். அடிக் குறிப்பில் ஆசிரியரின் பெயர் முதலெழுத்து (Initial) ஆசிரியருடைய பெயருக்கு முன்பும், நூலட்டவணையில் பின்பும் வரும்.

எடுத்துக்காட்டு

அடிக்குறிப்பில்:

1. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், **சயாமில் திருவெம்பாவை, திருப்பாவை** (திருச்சி, 1961), ப. 19.

2. பி. எஸ். மணி, **இந்திய தேசீயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்** (சென்னை, 1973), ப. 20.

அடிக்குறிப்பில் மேற்கோள் எடுத்தாண்ட பக்கத்தைக் குறிப்பிடவேண்டும். நூலட்டவணையில் பக்கத்தைக் குறிப்பிட வேண்டுவதில்லை.

நூலட்டவணையில்:

